72

ஸ்ரீ பர்வத வர்த்தனி

ஆசிரியர் : V. M. நடேச நாட்டார்

72/158

மலர் 2 | ஹேவிளம்பி மார்கழித் திங்கள் டிசம்பர் 1957 | இதழ் 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1958
MADRAS

	பொருளடக்கம்	பக்கம்
1.	பொங்கல் வாழ்த்து ...	88
2.	திருமண அழைப்பு ...	88
3.	பொங்கல் விழா ...	89
4.	திருக்குறள் ...	101
5.	வைத்தியம் ...	103
6.	நாம் ஒன்று நினைத்தால்......! ...	105
7.	நான் கண்ட சமுதாயம் ...	107
8.	தந்தைக்கு! ...	108
9.	தேசிங்கு ராஜன் ...	111
10.	கருணை உள்ளம் ...	115
11.	யார் பெற்ற செல்வம் ...	120
12.	மீன் இலாக்காவினால் நாம் அடைந்த பயன் என்ன?	125

சென்னை ராஜ்ய

...தராஜகுல சங்க

...மாத வெளியீடு

SL
211, N56.58
N57.24.
187259

விலை அணா 4

உ

பொங்கல் வாழ்த்து

உலகெல்லாம் வறுமைகுறை விலகிடவே வானும்
உதவியதால் செந்நெல்லும் வெண்ணெல்லும் மினிமை
விலகாத செங்கரும்பும் வெண்கரும்பும் மல்க
விண்ணுலகே மண்ணுலகாம் படிசெய்தும் பசுமை
இலகிடவும் உயிர்கட்கே இருங்குளிர்மை நல்கி
இனிமையுற வளங்கொழிக்கும் தைத்திங்கள் முதனாள்
அலகிலவாம் புதுப்பொருள்கள் கண்டு மகிழ்சிறக்க
அண்மியநல் **புதுப்பொங்கல்** பொங்க வாழியரோ.

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நலம்-நலம் அறிய அவா.

ஸ்ரீ பர்வதராஜ புத்திரியின் திருவருட் துணையால் நிகழ்வதாகிய ஏவிளம்பி ஆண்டு தைத்திங்கள் 13-ம் நாள் (26—1—1958) சஷ்டி, ரேவதி கூடிய சுபதினம் ஞாயிறு காலை 9-மணிக்குமேல் 10-30 மணி அளவில் மீன நல் லோரையில்,

எனது மகள்

செல்வி : புவனேஸ்வரியை

சைதை. திரு. அங்கப்ப நாட்டார் மகன்

செல்வன் : **A.** செல்வமணிக்கு (B.A.,)

சென்னை அடுத்த திருவான்மியூரில் கன்னிகாதான சுபமுகூர்த்தம் செய்விக்கப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் தமருடன்போந்து ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தங்களன்புள்ள,

V. M. நடேச நாட்டார்,

ஆசிரியர், ஸ்ரீ பர்வத வர்த்தனி,

தலைவர், சென்னை ராஜ்ய பருவதராஜ குல சங்கம்

மெம்பர், சென்னை ராஜ்ய பிஷரீஸ்

அட்வைசரிபோர்டு.

சென்னை,
31-12-57

உ

பராசக்தி துணை

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

பர்வதவர்த்தனி

"எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே".

மலர் 2	ஹேவிளம்பி மார்கழித் திங்கள் டிசம்பர் 1957	இதழ் 4

பொங்கல் விழா

தமிழ் மக்களாகிய நாம் பல பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம். அவற்றுள் மிகவும் தலையாயதும் சிறப்பாயதுமான பண்டிகை பொங்கல் பண்டிகையாகும். தமிழ் நாட்டின் சிறந்த தொழில்கள் இரண்டு. முதலாவது உழவு; இரண்டாவது நெசவு. இவைகளை வெளிப்படையாக உணர்த்துவதும் ஆதரிப்பதும் இப் பண்டிகையாகும். இதனை உழவுப் பண்டிகை என்றும் உழவன் பண்டிகை என்றும் சொல்லுவதுமரபு. "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை—செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற வள்ளுவர் வாக்கைப் பொன்னெனப் போற்றிச் செய்ந்நன்றி காட்டும் பண்டிகை. தக்ஷிணாயனம் கழிந்து உத்தராயன ஆரம்ப தினத்தன்று அச் சுபத்தின் அறிகுறியாகக் கொண்டாடுவது இது.

இயற்கையை வழிபட்டு நன்றி செலுத்தும் நாடு நம்நாடு. இயற்கையின் முதல்வனான சூரியனை நம் நாட்டில் தொன்று தொட்டு வழிபட்டு வந்திருக்கின்றார்கள். சமசீதோஷ்ண மண்டலத்திலும் சீதள மண்டலத்திலும் சூரியனின் சஞ்சாரம் இல்லாமையால் அங்குள்ள மக்களின் குண வேறுபாடு, நாட்டின் தன்மை, இயற்கைப் பொருள்களின் உற்பத்தி, தாவரங்களின் உற்பத்தி, பழக்க வழக்கங்கள், அவர்களின் ரஜோகுண, தாமச குணங்களின் தன்மை முதலியவைகளைக் காணும்போது சூரியனின் சமமான தோற்றமுடைய உஷ்ணமண்டல வாசிகளாகிய நாம் இப் புண்ணிய பூமியில் பிறந்ததற்கு மிகவும் கொடுத்து வைத்தவர்களாவோம் என்பதில் ஐயமில்லை. சூரியன் இல்லையேல் மழையில்லை; தாவரங்கள் இல்லை; சத்துவகுண உணவில்லை. இவைகளை அளிக்கும் சூரியனை உத்தராயனத்தின் முதல் நாளாகிய தை முதல் நாளன்று கொண்டாடுவது தமிழர்களின் தனிப் பண்பாகும்.

187209

ஆடிமாதம் தொடங்கி உழவன் உழுது பயிரிட்டு, களை களைந்து, நீர்ப் பாய்ச்சி, அறுத்து, அறுவடை செய்து. அரும்பாடு பட்டுக் கொணர்ந்த செந்நெல்லைக் கொண்டு உழவுக்கு உறுதுணையாக உதவிய மேகத்தின் அதிதேவதையான இந்திரனைப் போகி பண்டிகையன்று கொண்டாடுகின்றோம். புதுப்பானையில், பால் உலைஇட்டு, செந்நெல்லரிசியைப் பெய்து சர்க்கரைப் பொங்கல் செய்து கரும்பையும், கிழங்குகளையும் கொண்டு சூரியனுக்குப் படைக்கின்றோம். தோட்டி முதல் தொண்டமான் வரையில் அவரவர்கள் சக்திக்கு இயைந்தபடி, எல்லாவிதமான புத்தம் புதிய பொருள்களையும் கொண்டு கொண்டாடும் பண்டிகை ஆகும் இது.

உழவனின் எல்லாவிதமான வேலைகளுக்கும் வலக்கை போன்று உதவியாயிருப்பது கால் நடைகளான காளைகளும் பசுக்களும், இவைகள் இல்லையேல், உழவு இல்லை, வண்டியிழுக்க வசதியில்லை, பால் இல்லை, சத்துள்ள உணவு இல்லை, தேகத்தில் வலிமை இல்லை. சுருங்கச் சொல்லுமிடத்துயாவும் இல்லைஎனலாம். ஆகையால், அந்நன்றியை மறவாது பொங்கலின் மறுநாள் மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடுகிறோம். அன்று அவைகளைக் குளிப்பாட்டி அலங்கரித்து நல்ல தீனிகொடுத்து ஊர்வலமாக அழைத்துச் செல்வதோடு பற்பல விளையாட்டுக்களையும் விளையாடுகின்றோம்.

அடுத்தநாளைக் காணும் பொங்கல் என்றும், கன்று பொங்கல் என்றும் வழங்குகின்றோம். உழவனுக்கு உதவி செய்த வேலையாட்கள், மாடுகளை மேய்த்துவந்த சிறுவர்கள், மற்றும் பல பணிகளைச் செய்த பணியாட்கள் முதலியவர்கள் தங்கள் எஜமானர்களிடம் சன்மானம் பெற்று மிகச் சந்தோஷமாய் ஆடிப்பாடி காலம் கழிக்கும் நாள் அந்நாள். அந்நாள் எல்லாத் தொழிலாளர்களும் தங்கள் தொழிலின் திறமையைக் காட்டி சன்மானம் பெறுவதோடு, பெரியார்கள் சிறுவர்களுக்கு ஆசீர்வதித்து அனுக்கிரகிப்பதும் பண்டைய வழக்கமாகும்.

இவைபோன்று நான்கு நாட்கள் தொடர்ச்சியாக வரும் ஒரு பண்டிகை நம் நாட்டில் காண்பது அரிது. இவைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மைகளும் பல உண்டு. நாட்டின் தன்மையைக் கூறவந்த பொய்யா மொழியார்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்-சேரா தியல்வது நாடு" என்றார். அஃதாவது, மிக்க பசியும், நீங்காத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் இயல்வது நாடு என்பது இதன் பொருளாகும்.

உழவன் பொங்கலன்று தாராளமாய்ப் பொங்கல் செய்து தானும் தன் சுற்றமும் துணையோரும் சூழ உண்பதானது சோற்றுக்குப் பஞ்சமில்லை என்பதன் அறிகுறியாகும். அது பொங்கல் பண்டிகையின் உயர்ந்த கருத்து. இரண்டாவதாகப் பசுக்களையும் காளைகளையும் சிறப்புச் செய்வதால் கால் நடைகளின் பயன்களையும், ஏராளமான பால் பெருக்கத்தையும் அறிவிப்பதோடு, பால்

அதிகமாக அருந்துவதால் பசி நெருங்காது என்ற உண்மையான கருத்தையும் விளக்குகிறது மாட்டுப் பொங்கல். உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்களுக்குச் சன்மானிப்பதும், பெரியவர்கள் சிறியவர்களை ஆசீர்வதிப்பதும், ஆண்டான் அடிமை என்ற வித்தியாசம் பாராட்டாமல் அன்பு பெருகி அருளோடு ஒழுகுவதும், பகையின்மையைக் காட்டும் அறிகுறியாக நிற்பது காணும் பொங்கல், அல்லது கன்று பொங்கல் ஆகும்.

சுகாதாரத்தின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு உணர்ந்த தமிழர்களாகிய நாம் இப் பண்டிகைக்கு முன்னரே வெள்ளையடித்து, இல்லத்தையும் வெளிப்புறத்தையும் தூய்மைசெய்து, வீட்டிலுள்ள பழையவைகளையும் அநாசாரமானவைகளையும் நெருப்பிலிட்டுக் கொளுத்தி மிகத் தூய்மை செய்து வைத்துக் கொள்ளுகின்றோம்.

மேலும், இப் பொங்கல் மாதத்தின் முன் மாதமாகிய மார்கழி மாதம் இறைவனின் அருள்பெறும் அரிய மாதமாகும். ஸ்ரீ கண்ணபிரான் "நான் மாதத்தில் மார்கழி மாதமாய் இருக்கின்றேன்" என்று அருளிச்செய்தது மிகவும் கூர்ந்து சிந்தித்தற்குரியது. இம் மாதத்தில்தான் சைவர்களுக்கு முக்கியமான திருவாதிரையும், வைஷ்ணவர்களுக்கு முக்கியமான வைகுண்ட ஏகாதசியும் வருகின்றன. இம்மாதம் தேவர்களின் விடியற்காலம். இம்மாதம் முழுவதும் பாவையர்கள் நோன்பு நோற்பது நம்நாட்டு வழக்கம். காலை 4 மணிக்கே எழுந்து தூய நீரில் நீராடி, பூசைமுடித்து, அவரவர்களின் மதாசாரப்படி திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி, எழுச்சி, திருவாசகம், திருப்பல்லாண்டு முதலியவைகளை மிகவும் பயபக்தியோடு ஓதி வழிபடுகின்ற வழக்கம் இன்றும் நம் நாடுமுழுதும் காண்கின்றோம். எங்கும் பாராயணமும், பஜனையும், பாட்டும், கூத்தும் காண்போர் மனத்தையும், கருத்தையும் கொள்ளை கொள்ளும் தன்மையுடையதாக விளங்கும். இன்னும் பல பல அரிய கருத்துக்கள் இப் பண்டிகையை விளக்குவனவா யிருக்கின்றன. விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றனம்.

அன்பர்களே! இத்தகைய புனித பண்டிகையில் நீங்களும் உங்கள் குடும்பமும் சந்தோஷ ஆரவாரத்தில் மூழ்கவேண்டும். தமிழர்களின் பழைய தொழிலான **கைத்தறி ஆடைகளையே** வாங்கி உடுத்தி கைத்தறியாளர்களின் வறுமையைப் போக்கவேண்டும். நம் நாட்டில் கோடிக்கணக்கானவாகள் இக் கைத்தறியையே நம்பி வாழ்கின்றார்கள். நம்மால் கூடிய வரையில் அவர்களை வாழச் செய்யவேண்டும். நாட்டு மக்களாகிய நாம் மனம் வைத்தால் கைத்தறிக்காரர்கள் இன்று குபேரர்களாக ஆகிவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகையால், அவர்களை எப்பொழுதும் நம்மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டியது நமது முக்கிய கடமைகளுள் ஒன்றாகும். இச் சுபகாலத்தில் எல்லாம் வல்ல இறைவனின் அருள் நமக்குப் பூரணமாய்க் கிடைக்க அவனருளை இறைஞ்சுவோமாக. பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

வாழ்த்து

பொங்குக பொங்கல் உள்ளம் பொங்குக மகிழ்ச்சி யார்க்கும்
தங்குக வளங்கள் எங்கும் தங்குக வான் செல்வம் ஓங்கி
மங்குக வறுமை துன்பம் மங்குக பகைமை யாவும்
பொங்குக தமிழர் வாழ்வு பொங்குக தமிழன் இன்பே.

[ஆசிரியர்.]

திருக்குறள்

வித்வான் K. N.

15-ம் அதிகாரம்

பிறனில் விழையாமை

அஃதாவது காம மயக்கத்தினல் பிறனுடைய மனைவியை விரும்பாமையாம். ஒழுக்கமுடையவர்களிடத்தே இது நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

திருவள்ளுவர்

1. பிறனுக்குச் சொந்தமாம் தன்மை யுடையவளை இச்சித்து (விரும்பி) நடக்கின்ற அறியாமையானது, உலகிற்கண் அறநூலையும் பொருள் நூலையும் ஆராந்தறிந்தவரிடத்து இல்லை.

இன்ப நூல் ஒன்றையே கருதும் காம நூலுடையார் பிறனுக்குரியவளை விரும்பிநடத்தலாகிய இப் பொல்லாத ஒழுக்கத்தையும் அன்னியருக் குரியது என உடன்பட்டுக் கூறுவர். ஆதலாலே அவரை நீக்கி அறநூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்தவரிடத்து இல்லை என்ருர். எனவே பிறன் மனையாளை விரும்பும் பேதைமையுடைய வரிடத்து அறமும், பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது.

2. ஆசை காரணமாகப் பாவத்தின்கண் நின்றவர் எல்லாருள்ளும் பிறனது வாயிலினிடத்தே அவன் மனையாளை விரும்பி நின்றவர் போல் அறிவில்லாதவர் இல்லை.

பாவச் செயலிலே நின்று தமது வழியில் நடத்தற்கு உரிய மனைவியரது வழி இன்பம் அடைபவரும், விலை கொடுப்பார் யாவருக்கும் தம் நலத்தை விற்பதேயன்றி அந்நலத்தை அனுபவித்

தற்கு இன்னுரானவர் இன்னுராகாதவரென்னும் வரம்பிலாத வேசியர் வழி இன்பம் அடைபவரும், தாழ்ந்த குலத்திற் பிறந்த பெண்கள் வழி இன்பம் அடைபவரும் அறம் பொருள்களை மாத்திரம் இழப்பர். ஆனுல், பிறன்மனையாளிடத்துச் செல்வோர் அறம் பொருளை இழப்பது மாத்திரம் அல்லாமல் அச்சத்தினுலே இன்பத்தையும் இழக்கின்ருர் ஆதலின் அறிவில்லாதவர் என்ருர். எனவே, இவர்களுக்கு இன்பமும் இல்லையென்பது பெறப்பட்டது.

"புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சந் தோன்ருமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன் கொலோ
உட்கான் பிறனில் புகல்" என நாலடியார்

கூறுவதும் அறிக.

3. தம்மை நல்லவர் என்று சந்தேகமில்லாமல் தெரிந்தவரது மனைவியிடத்துப் பாவஞ்செய்தலை விரும்பி நடப்பவர் உயிருடையவராயிருந்தாலும் அவ்வுயிர் அறம் பொருள் இன்பங்களாகிய பயன்களை அடையாமையால் செத்தவரின் வேருகார். (செத்தவரேயாவர்.)

4. காம மயக்கத்தினுலே சிறிதாயினும் தம் பிழையை நினையாமல் பிறனுடைய மனையாளிடத்தே செல்லுதல் எவ்வளவு பெருமையுடையவராயிருப்பினும் இந்திரனைப்போல் சிறுமையை அடைவார் என்பதாம்.

இந்திரன் கௌதம முனிவரின் மனைவி அகலிகையை விரும்பிப் புணர்ந்து கௌதம முனிவரால் சபிக்கப் பெற்று தனது பெருமை கெட்டு இழிவை அடைந்தான். இதனுல் எவ்வளவு கௌரவமுடையோராயினும் அக்கௌரவங்கெட்டு அவமானத்தை அடைவர் என்பது பெறப்பட்டது.

5. இவளைச் சேர்தல் எளிதென்று நினைத்துப் பின்வரும் துன்பத்தை எண்ணுது பிறனது மனைவியினிடத்து வரம்பு கடந்து செல்பவன் அழியாமல் எக்காலமும் நிலை நிற்பதாகிய குடிப் பழியை அடைவான்.

6. பிறன் மனைவியிடத்தே செல்வானிடத்துப் பகையும், பாவமும், அச்சமும், குடிப்பழியும் என்னும் இந் நான்கு குற்றங் களும் ஒருபோதும் நீங்காவாம்.

இதனுல் இவ்வுலக இன்பமும் மறுமை இன்பமும் இழத்தல் பெற்ரும். இவை ஆறு பாட்டாலும் பிறன் மனையாளை விரும்புவோனிடத்துக் குற்றம் சொல்லப்பட்டது.

7. பிறனுக்கு உரிமையாகிய இயல்பிலே நிற்பவளாகிய அவன் மனைவியை விரும்பாதவனே அறமாகிய இயல்போடு கூடி இல்வாழ்வானென்று சொல்லப் படுவான்.

இதனுல் பிறன் மனைவியை விரும்புபவன் இல்லறம் செய்பவன் என்று சொல்லத்தகும் தகுதியற்றவன் என்பது பெறப்படுகிறது.

8. பிறனது மனையாளை விரும்பாத பெரிய ஆண் தன்மையானது அறிவால் நிறைந்தோர்க்குத் தருமமுமாகும் நிறைந்த ஒழுக்கமுமாகும்.

புறப்பகையை அடக்குவார்க்கும் அகப்பகையாகிய காமத்தை அடக்குதல் அருமையாதலால் அதனை அடக்கியவரைப்பெரிய ஆண் தன்மையுடையவர் என்றார். பிறன் மனையாளைக் கூடக் கருதாதவர்க்கு செய்தற்கரிய அறமும் ஒழுக்கமும் உண்டாகும் என்பதாகும்.

9. பிறனுக்கு உரிமையானவளது தோள்களைச் சேராதவரே அச்சந்தரும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தினிடத்தே எல்லா நன்மைகளையும் பெறுவதற்கு உரியவர் ஆவர்.

10. ஒருவன் அறத்தைத் தனக்கு உரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்தாலும், பிறன் எல்லையிலே நிற்பவளது பெண் தன்மையை விரும்பாதிருத்தல் உண்டானால் அவனுக்கு அது நல்லது.

பாவங்களைச் செய்யுங் குற்றங்களில் பிறன் மனையாளை விரும்புதலாகிய இக் குற்றமே மேம்பட்டுத் தோன்றுமென்பதாம். இவை நான்கு பாட்டாலும் பிறன் மனையாளை விரும்பாதவனிடத்துக் குணம் சொல்லப்பட்டது.

வைத்தியம்

தமிழ்ப்புலவர் சிவ. முருகசிவம்
(75, நைனியப்பன் தெரு, சென்னை-1)

நீரின் குணம்

சென்ற இதழில் நீரின் குணங்களில் நதிகளின் சிறப்பும் சிற்ருறு, அருவி, குளம், ஏரி நீர், சுனை நீர், முதலியனவும் சிறிது பார்த்தோம். அவ்வாறே கேணி ஜலத்தினை இங்கு ஆராய்வோம். கிணற்று ஜலம் பொதுவாக நலம் செய்வது இல்லை. மேலும் பதினுறு முழம் ஆழத்தில் கிடைக்கும் ஜலமே நல்லது. அதிக ஆழத்தில் இருக்கும் ஜலத்தினுல் பல வியாதிகளுண்டு. கிணற்று ஜலத்தினுல் உஷ்ணம், தீபனம், தேக அழற்சி, பித்த தோஷம் முதலியவும் வெளிப்படுத்தும். மேலும் அந்தக் கிணறு நல்ல பூமியில் இருக்கவேண்டும்.

பாறை ஜலம் :—தேகம் சில்லிடலும் வாத தோஷமும் தீராச் சுரமும் உண்டாகும்.

சுக்கான் பாறை ஜலம் :—மூத்திரக் கடுப்பு, நெஞ்சிற் கபக் கட்டு, பித்தாதிக்கம், மனேவியாதி ஆகியவைகளை உண்டாக்கும். ஆனல் மகா வாத ரோகத்தை விலக்கும்.

கரும்பாறை ஜலம் :—வீக்கம், வாந்தி, பித்த ஜ்வரம், மயக்கம், மூத்திரக் கடுப்பு, தாகம் ஆகியவற்றை நீக்கி வீரியம் புத்தி அழகு முதலியன உண்டாக்கும்.

ஊற்று நீர் :—ஆற்று மணலிலே தோண்டிய ஊற்று ஜலம் மதுரமாக இருக்கும். மிகுந்த பித்தத்தை உடனே சாந்தி செய்யும். சுத்தமான மாரி ஜலத்தால் குளிர்ச்சியும் நல்லறிவும் சுக்கிலம் சோணிதம் முதலியனவும் அதிகரிக்கும். மழைகால ஆரம்பத்திலும் வெய்யிற்கால முடிவிலும் பெய்கின்ற கல் மழை அதாவது ஆலங் கட்டிநீர் சிலேஷ்மப்பிரமேகம், பொருட்பாடு, நேத்திரத்தில் புகை, கம்மல், கைகால் எரிவு, விக்கல், சுவாசம், மயக்கம் முதலியவை களைப் போக்கிக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

பனி நீர் :—சூரியோதய காலத்தில் பனி ஜலத்தை அருந்திஞல் சொறி, கிரந்தி, குஷ்டம், தாபம் காசம், கிரணி, திரிதோஷம், தேக வரட்சி, நீரிழிவு முதலியன அடியோடு குணமாகும். ஆனல், இந்தப் பனிஜலத்தை எடுக்க வேண்டிய முறைப்படி எடுத்துக் கோடை காலத்தில் சாப்பிடவேண்டும்.

சிவந்த நீர் :—ஒரு சிலர் நல்லதென்று கூறுவர். சிவந்த மண் நல்லதே தவிர சிவந்த ஜலத்தால் பித்த உஷ்ணம் விலகும் என்ரு லும் சுரமும் எரிவும் விந்து நஷ்டமும் உண்டாகும்.

கருத்த நீர் :—வாந்தி கரப்பான் உஷ்ண எரிவு மார்புச்சளி சுவாச காசம் புளித்தேப்பம் முதலியன குணமாகும்.

வயல் நீர் :—நெற் கழனியிலிருக்கும் தண்ணீர், பிரமேகம் வெள்ளை சுரம் மூர்ச்சை ரத்தகாசம் சுரவேகம் ஆகிய இவைகளைப் போக்கி சப்த தாதுக்களுக்குக் குளிர்ச்சியும் தேகபலமும் உண்டாக் கும்.

நண்டுக் குழிநீர் :—வயல்களிலிருக்கின்ற நண்டுக்குழி ஜலத் தால் வமனம் விதாகம் நீங்காத விக்கல் தேக வெப்பம் எரிவு ஆகிய இவை போகும்.

வழுவழுத்த பாசி ஜலம் பிணிகளை உண்டாக்கும், ஊற்றுள்ள ஓடை ஜலம் சகல நோய்களையும் குணமாக்கும். வரத்தும் போக்கும் இல்லாத நிலை ஜலத்தால் குடல் வாதம் உண்டாகும். பனி மாசு படிந்த ஜலத்தால் பித்த கோபம் போகும். சரகு ஊறிய ஜலம் பல சுரத்தை யுண்டாக்கும்.

[தொடரும்]

நாம் ஒன்று நினைத்தால்...!

"தென்குமரன்"

வானக் குளத்தில் நிலவுத்தாமரை பூத்தது! மீன்கள் அங்கு மிங்கும் நீந்தித் திரிந்தன. தென்றலின் அணைப்பில் பூவினம் நிலை மறந்து இருந்தன. எத்திசை நோக்கினும் ஒளி மயம்; இன்ப மயம்.

என் வீட்டின் மேன் மாடியில் சாய்வு நாற்காலியில் படுத் திருந்த எனக்கு உறக்கம் வரவில்லை; சிந்தனை வளர்ந்தது.

"ஆகா! நிர்மலமான நீலவானம்; அதில் நீந்தி வரும் நிலவு. அங்கங்கே வைரமணிகள் என விண் மீன்கள்! ஆதியந்தமில்லாத அந்தப் பரம் பொருளின் கலைவன்மையை என்னென்பது! அவன் கருணையின் வடிவம் மட்டுமல்ல; இன்பத்தின் முழு உருவம்; கலை யின் எல்லை; மனித இனத்தின் முன்னோடி!

இப்படி என் சிந்தனை நீண்டுகொண்டிருந்தது.

திடீரென்று தென்றல் புயலானதோ என்றெண்ணுமாறு காற்று பலமாக வீச ஆரம்பித்தது; வானம் தன் ஒளி இழக்க ஆரம்பித்தது; மேகங்கள் அரக்க உருபெற்று, வானத்தை மூடின; எங்கும் இருள் சூழ்ந்தது; மழையும் பெய்ய ஆரம்பித்தது!

என் சாய்வு நாற்காலியை மடக்கிக் கொண்டு, என் அறைக் குள் வந்து படுத்தேன். அங்கும் உறக்கம் வரவில்லை; அறுந்த என் சிந்தனைக் கயிற்றை முடிபோட்டு நீளமாக்கினேன் ....

"சே .....! மழை பெய்யாது என்று நினைத்து மாடியில் படுத்தால், மழை பெய்கிறதே! சற்று முன் கருணை வடிவமாய் இருந்த கடவுள்—இன்பத்தின் உருவமாய் இருந்த கடவுள் இப் போது அரக்க உள்ளம் பெற்று விட்டானே!"

"அய்யோ, நான் மாடியில் படுத்ததைப் போல, வீதியோரத் தில் படுத்திருக்கும் உழைப்பாளிகள் எவ்வளவு வேதனைப் படுவார் கள்? நாளெல்லாம் மற்றவர்களுக்கு உழைத்துவிட்டு, இரவு வேளை களில் ஓய்வை விரும்பிய அந்த 'வீதியோரத்து மன்னர்கள் எத் துணைத் துயர்ப் படுவார்கள்? ஆண்டவன் அருள் நிரம்பியவனா? அவன் ஏழைகள் விரோதியா?

கேள்விக் கொக்கிகளை மாட்டிக் கொண்டுபோன என் சிந் தனை மனிதன் தடுக்கி விழுந்தான்!

> "அவனன்றி அணுவும் அசையாது—ஓர்
> அணுவும் அசையாது!"

ஒரு பிச்சைக்காரன் அந்த மழையிலும் இப்படிப் பாடிக் கொண்டு போனான்!

'ஆண்டவன் ஏழைகள் விரோதியா ?' என் மனம் கேட்டது ! அந்தப் பிச்சைகாரனே, 'அவனன்றி அணுவும் அசையாது ! என்று பாடிக் கொண்டு போகிறுன் ! என் சிந்தனை குழம்பியது; சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு. உறக்கத்தை அணைத்தேன்; வெகு நாளைய உழைப்புக்கப்புறம் அழகு தாஜ்மகால் எழும்பியது போல, அதிக நேர முயற்சிக்கு அப்புறம் உறக்கம் வந்தது !

அன்று வானம் கருத்திருந்தது; எங்கும் ஒரே இருள்; காற்றும் நின்றுவிட்டிருந்தது; மழை பெய்வதற்கான அறிகுறிகளும் தென்பட்டன. 'மழை நிச்சயம் வரும்; தெருவாசிகளுக்குத் தொல்லை தரும்' என்று நினைத்தேன். என் நினைவை ஆமோதிப்பது போல வானம் மின்னியது; இடி முழக்கம் செய்தது; என் நம்பிக்கைக்கு ஆக்கம் தந்தது !

ஆனல் . . . . . எங்கிருந்தோ வந்த காற்று, அசுர பலத்தோடு போர் செய்து, மேகக் கூட்டங்களைச் சிதற அடித்தது ! நீதிக்கும் அநீதிக்கும் நடந்த போரில் அநீதிக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது ! ஒளியென்ற தமிழனின் வீரத்திற்குமுன் இருள்என்ற வேற்று நாட்டானின் வீரம் அடிபணிந்தது. இருள் மாய்ந்தது; ஒளி நிறைந்தது. தரை மாதாவின் அழகைக் கண்டு, சந்திரன் மயங்கி; அணைத்துக் கொண்டான்; பூமாதா மகிழ்ந்தாள்; பூரண சந்திரனின் அகம் குளிர்ந்தது ! என் சிந்தனைப் பெண் எதையோ சொல்ல ஆரம்பித்தாள் !

சிறிது நேரத்திற்குமுன் மழை வரும் நிச்சயம் என்று நம்பினுயே; மழை வந்ததா ? அன்ருெரு நாள் மழை வராது என்று நினைத்தாயே; மழை வராமலா போனது ? பைத்தியக்காரா ! நாம் நினைப்பது எதுவுமே நடப்பது கிடையாது. நீ நினைத்தாய் ஒன்று ; நடந்தது வேருென்று ! இதுதான் இயற்கையின் தத்துவம்; இதைக் கடவுள் தத்துவம் என்றும் சொல்லலாம் !'

சிந்தனைப் பெண்ணின் பேச்சொலி நின்றது; எங்கிருந்தோ ஓர் இசையொலி எழுந்தது.

> எண்ணுவது போல் நடந்தால்
> ஈசன் ஒன்று ஏது ?

ஒரு பிச்சைக்காரன் தன் வயிற்றைக் 'கழுவிக்' கொள்ள இப்படிப் பாடிக் கொண்டு போனுன் ! நான் மேல் மாடிக்குச் சென்று சாய்வு நாற்காலியை விரித்துப் படுத்தேன். என் கண்கள் வானை நோக்கின; அங்கே நிலவு சிரித்தது; நட்சத்திரங்கள் சிரித்தன; உலகம் சிரித்தது; சிந்தனையும் சிரித்தது !

நான் கண்ட சமுதாயம்

(விபூதி - இரா. கோவிந்தசாமி, இடப்பாடி)

காலை மணி ஆறு ஆயிற்று. கடற்கரைப் பக்கம் சென்றேன். காகங்கள் கரைந்தன. பறவைகள் பற்பலவாராகப் பறந்தன. ஆந்தைகள் தன் தன் கூட்டிற்குச் சென்றன. காலைக் கதிரவன் செந்நிறத்தோடு நீலக்கடலினின்றும் வெளி வருபவன் போல் உதயமானன்.

அவ்வேளையில் செம்படவர்கள் தங்கள் தங்கள் படகுகளைக் கடலிலேவிட்டு மீன் பிடிப்பதற்காகத் தங்கள் சகாக்களோடு புறப்பட்டார்கள். கடலின் நடுவே செல்லும் காட்சியைக்காண மிகவும் வியப்புற்றேன். காரணம்? என்னே இவர்களின் துணிச்சல், அலை மோதிக் கொண்டிருக்கும் இந்த ஆழ்கடலிலே தங்கள் அல்லல்களையும் பொருட்படுத்தாமல் அவர்களின் அலுவல்களைக் காண என் உள்ளம் பூரிப்படைந்தது. அவர்கள் தங்கள் உயிரைத் துச்சமெனப்பாவித்துக் கடலிலே செல்லும்போது ஒரு பிரம்மாண்டமான அலை அவர்களின் படகைக் கடலிலே ஆழ்த்திவிட்டது போல் காண எனது உடம்பு சிலிர்த்து விட்டது. மறுவிநாடியே அவர்களின் படகு கடலினின்று வெளி வந்தது போல் அலைமீது எழுந்து வில்லினின்று புறப்பட்ட அம்பு போல் விர்ரென்று எதிர்நோக்கிச் செல்ல வியப்புற்றேன்.

என்னே! இவர்களின் துணிச்சல். என்னே! இவர்களின் ஆர்வம். அச்சம் என்பதே அறியாது இவர்கள் அன்றுடும் பிறந்து இறந்தவர்களாகக் காட்சி அளிக்கிருர்கள் என எண்ணி என்னை அறியாமலேயே என் வாய் முணு முணுத்தது.

இவர்கள் யார்? இவர்கள் நாம் நம் குலக் கொடியின் கண். அரும்புவிட்டு மொக்காய்ப்பூவாய்ப் புஷ்பித்துக் கண்டோர்களைக் களிப்பூட்டுவதோடு இவர்களின் பணி நின்றுவிடவில்லை. கோழைகளையும், தீரனுக்கி சோம்பேறிகளையும் சுறுசுறுப்புடையவனுக்கி நம்குலத்தின் சலியா உழைப்பினையும், தன்னலமற்ற தியாகத் தன்மையையும் உலகிற்கு எடுத்துக்காட்டாக விளக்குகிருர்கள். இவர்களின் மரபிலே பிறந்த நம்மில்சிலர், இன்று சோம்பேறிகளாய், கோழைகளாய் ஆனதுமட்டுமன்றி, தன்னலமேபெரிதெனக் கருதி அவர்களின் தொழிலையும், மேம்பாட்டினையும் அடைய இரிகிருர்களே தவிர ஒரு நாளில் ஒருமணி நேரமாவது நம்குலத்தின் சீரைப்பற்றி ஆராய்வது இல்லை. நம் சமூகத்தினை மேம்பாட்டிற்குக் கொண்டு செல்ல எண்ணுவோர் சிலரே. அச்சிலரையும் மட்டம்தட்டும் அளவுக்கு நம் சமூகத்தினரில் சிலர் வருகிருர்களே தவிர, அவர்களின்சேவையைப்பாராட்டி, அவர்களை மேன்மேலும் உற்சாகப் படுத்தி, தாமும் கூட இருந்து ஒத்துழைக்க முன்வருவதில்லை. ஆதலால், நம் சமூகத்தின் கண் மண்டி கிடக்கும் குற்றம் குறைகளை நம்சமுதாயப் பெருங்குடி மக்கள் ஆராய்ந்து ஆசிரியர்க்

குத் தெரிவிப்பார்களானால் நம்குலம் உயர்நிலைக்குவருவது நிச்சயம் என்பது யாவரும் அறியவேண்டும். நம்குலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு 25 பேர் இருப்பது அரிது. இந்த அவல நிலை நம்மைவிட்டு நீங்க நம் குலத்தவர்கள். காட்டுமன்னார் குடியில் நம் சமூக மக்களுக்காக இலவச ஊண் விடுதியும் கல்விச்சாலையும் ஏற்படுத்தி உள்ளார்கள்.

அதை நல்ல முறையிலே நடத்தி நம் குலமக்களைக் கல்விஅறிவுடையோர் ஆக்க நம்மால் இயன்ற பொருள் உதவியோடு உழைப்பும் கொடுத்து அதற்கென நடக்கும் நம் குலப் பத்திரிகை "பருவதவர்த்தினி"க்கு ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பருவதவர்ததினியைப்படித்து நம்குலத்தின் சாதனையை அறிவதுமட்டுமல்லாமல், நம் குல மக்களின் குழந்தைகள் கல்விஅறிவு பெற பாடுபட்டவர் ஆவோமெனவும் எண்ணுகிறேன். அது மட்டுமில்லாமல்நம் குல மக்கள் பெருவாரியாக உள்ள ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வாசகசாலையும், ஊண் விடுதியும் ஏற்படுத்த நாம் முன் வந்து ஆவன செய்வோமாகில் நம் குலத்தின் சீர்கேடான நிலை நம்மை விட்டு நீங்குவது மட்டுமன்றி நம் குலப் பெருமை நாட்டிற்கும் உலகிற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் என்பதற்குச் சிறிதும் ஐயப்பாடு வேண்டியதில்லை. நம் குலம் தழைத்து ஓங்க ஒவ்வொருவரும் பாடுபடுவது மட்டுமன்றி ஒவ்வொருவரும் குலப் பத்திரிகையின் சந்தாதாரர்களாகச் சேர்வது மட்டுமன்றி சந்தாத் தொகையும் ஆண்டுக்கு ஒருமுறை கட்டி ஏற்கனவே சந்தாதாரர்களாக இருக்கும் அன்பர்கள் ஆளுக்கு பத்துப் பேர் வீதம் சந்தாதாரர்களைச் சேர்க்க வேண்டும் என்ற பிடிவாத குணம் படைத்தோமாகில் நம் குலம் உயர் நிலை அடைய பெரிதும் பாடுபட்ட பெரியார் ஆவீரெனநான் உளம்கனிந்து உரைப்பதைத் தவிர எல்லாம் வல்ல அன்னை பருவதவர்த்தினிநீண்ட ஆயுளையும் குறைவற்ற செல்வத்தையும் கொடுப்பாள் எனவும் இறைஞ்சுகின்றேன்.

—o—

தந்தைக்கு!

அன்புள்ள தந்தைக்கு!

அப்பா தங்களின் அன்பு மடல் கிடைத்து அளவிலா மகிழ்ச்சி பெற்றேன். மடல் ஒவ்வொன்றிலும் புடமிட்ட தங்க நிகர் கருத்துக்களை வளியுறுத்தி வரைந்துள்ளது கண்டு களிப்பும் கண் பார்வையும் (அறிவு தெளிவு) அடைகின்றேன்.

தாங்கள் எங்கள் இல்லத்தின் தற்போதைய நிலை எவ்வண்ணமிருக்கின்றது என்று கேட்டுள்ள வினாவிற்கு விடையைக் கடைச்சரக்காக இன்றி கருத்தோவியமாகத் தரவேண்டுமென்று நினைத்து நினைத்துச் சிந்தனையை ஒன்றுபடுத்தி மேலே எழுத ஆசைப்படுகின்றேன். இதனைத் தாங்கள் மட்டுமன்றி அம்மா, அக்கா,

அண்ணு மற்றும் அன்பு தங்கை, தம்பிக்கும் படித்துக் காட்டி இல்லத்தின் இன்ப வாழ்வையும் அதனைச் செம்மையுற நடாத்தி வருகின்ற பெரியார்களும் செயலாளர் திரு. வீ. ப. சிவஞானநாட்டார் மற்றும் செயற் குழுவினர்களின் தொண்டையும் உணர்த்தி ஊக்குவிக்க வேண்டுகின்றேன்.

அப்பா!!

ஆண்டு பலவாக அரும்பணி புரிந்தும் நம் இனம் மற்றவர்கள் போல் நல்லறிவு பெற்றோர் நாவிலும் நாட்டு மக்களின் மத்தியிலும் நன் மதிப்பைப் பெறவில்லையே என்று ஏங்கி இறந்தும் இறவாச் சிறப்பெய்திய திரு. கு. கோதண்டபாணி நாட்டாரும் இறக்கும் வரை இரப்போர்க்கு இயன்றது ஈந்து வாழ்தலையே வழிபாடாகக்கொண்ட திரு. வீ.பக்கிரிசாமிநாட்டாரும்பலமுற்போக்கு எண்ணம் கொண்ட பெரியார்களெல்லாம் ஒன்று சேர்ந்து கல்வி ஒன்றே நம் இனம் மணம் பெறுதற்கான தக்கதோர் பூங்கொத்து என்பதை உணர்ந்து 1946-ம் ஆண்டில் இவ்வூர் நம்மவர் வாழ் தெருவில் வாடகைக் கட்டிட மொன்றில் 36 மாணவர்களுடன் எதையும் தாங்கும் இதயம் படைத்த செயற் குழுவினர் துணையுடன் இப் பெரும் கல்விச் செடியை நட்டார்கள். நாளடைவில் ஊருணி நீராகப் பெருகி உயர்ந்தவர் இதயத்திலே யெல்லாம் உதயம் பெற்று இன்றைக்குச் சுமார் ரூபாய் இருபத்தையாயிரத்துக்கு மேல் மதிப்புடைய சொந்தக் கட்டிடத்தில் 183 மாணவர்களைக் கொண்டு நம் இனமேயன்றி மற்றவரும் பெருமைப் படும் அளவில் பெரியதோர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இல்லத்தின் காட்சி இனத்தவர்க்கோர் எழுச்சி.

உணவு!!!

அம்மா என்னைச் சேர்க்குமுன் "உணவு போதாதாமே அங்கு ஏன் சேர்க்க வேண்டும் என் செல்வத்தை? இங்கேயே இருந்தானுல் எம்மட்டோ உதவியாக இருக்கும் எனக்கு" என்று அன்று கூறியதை இப்போது நினைத்தாலும் நம் இனத் தாய்க் குலம் இன்னும் பின்னிலையிலேயே இருப்பதற்குக் காரணம் "தன் மக்களின் உடல் வளர்ப்பதல்லால் உள்ளத்தை வளர்க்கப் பண்படாததினுல் தான். எங்களுக்கு அளிக்கப்படும் உணவை விட எந்த ஓர் தாயும் தன் அன்பாலும் மற்ற எந்தச்சக்தியாலும் அதிகமாக அளிக்கவோ ஆசை மொழி கூறி ஊட்டவோ முடியாது என்பதை இல்லத்திலிருந்து ஊர்வந்த இரண்டொரு தினங்களிலேயே அறிகின்றேன். இது எனக்கு மட்டுமல்ல. இல்லத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மாணவனும் உணர்ந்த உண்மையாகும். உணவு பற்றுக் குறை என்ற ஒருசொல் எங்கள் இதயத்தின் எந்த ஒரு மூலையிலேயும் இசைத்ததாக என் உள்ளமும் செவியும் அறிந்தது இல்லை

கல்வி!!!!

நான் ஊரில் இருக்கும் போது நமது தெருக் கோடியில் குடி இருக்கும் குப்புச்சாமி வாத்தியார் அடிக்கடி "மக்கு, ஒன்றும்

தெரியவில்லை, எப்படியடா படிக்கப் போகிருய்?'' என்று என் காதைப் பஞ்சர் செய்வாரே அவரே நாளை நான் வரும்போது வியப்பும் வெட்கமும் அன்டகின்ற அளவிற்குத் தேர்ந்து விட்டே னென்ருல் மிகையாகாது. சென்ற காலாண்டில் நாங்கள் பெற்ற எண் 60க்கு மேல் தான் என்று பெருமையுடன் கூறிக் கொள்கின் றேன். ஒருசில மாணவர்கள் 40-க்கு மேல் பெற்றுள்ளார்கள். என் பதற்காக "அண்ணு" இருவரும் அவர்களை முக்கியமாகக் கண் காணிப்பில் வைத்துக் கொண்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும். பள்ளியில் எந்தப் போட்டிகளிலும் அதிக அளவில் பரிசு பெறு வோர் நாங்களே! இதை நாங்கள் மட்டுமல்ல. நாங்கள் பயிலும் பள்ளியிலுள்ள அனைவரும் — ஊரும் கூறும் பொய்யாமொழி யாகும்.

நடத்தை!!!!!

அன்று என்னைப் படிப்பதற்காகக் காலையில் தாங்கள் எழுப் பிய காலததிலே யெல்லாம் "அவனை ஏன் தொந்தரவு செய்கின் றீர்கள். அவன் படித்து என்ன ஆகவேண்டியிருக்கிறது. படித் தவர்களெல்லாம் எதைக் கட்டிக் கொண்டார்கள்.'' என்று அம்மா எனக்குச் செல்லம் காட்டுவதாக நினைத்து மணி 7 வரை துயின்ற நான் இன்றைக்கு இல்லத்திலே முதலில் எழுபவர்கள் பட்டியலில் முதல்வன் என்ருல் மற்றவர்களைப் பற்றிக் கூறத் தேவையில்லை. ஆரும் படிவ (S. S. L. C.) மாணவர்களும் அண்ணுக்கள், திரு. முரு கேச நாட்டார் திரு. கா. மு. இராமசாமி ஆகிய இருவர்களும் பின் தூக்கிமுன்னெழும் உண்மைக் கொப்ப இரவு 11-மணிக்கு உறங்கி காலை4-மணிக்கே எழுந்து எழுப்பி விடுவார்கள். நாங்க ளெல்லாம் வழக்கப்படி 5-மணிக்கு எழுந்து எல்லாம் வல்ல சக் தியை வணங்கிப்படிப்பில் கருத்தைச் செலுத்துவோம். பின் 6—30 மணிக்கு மேல் தோட்டவேலையுடன் சுற்றுப் புறச் சுத்தம், உடற் பயிற்சி முதலியன முடித்துக்கொண்டு ஒன்றுபட்ட உள்ளத்துடன் திருமுருகனை வணங்கிக் காலை உணவை யுண்டு பள்ளிக்குச் செல் வோம். 1 மணிக்குப் பகல் உணவு, மாலை இல்லத்தின் முன்புற முள்ள விளையாட்டு மனையில் உடலும் உள்ளமும் உறுதி பெறும் விளையாட்டுக்களை விளையாடி மாலை 6-மணிக்குக் கைகால்களைத் தூய்மை செய்து கொண்டு முருகப் பெருமானை வணங்கிப் படிப் பிற்குச் செல்வோம். பின் 8-மணிக்கு உணவும் பின் உலாவலும் முடித்துக் கொண்டு சரியாக 9-30 அல்லது 10-மணிக்குப் படுக் கைக்குச் சென்று விடுவோம். இதுவே யன்றி பிரதி சனிக்கிழமை தோறும் பொதுப் பணியும், ஞாயிறு தோறும் சொல் வன்மைக் கழகமும் நடத்தி எங்களின் எதிர்கால வாழ்க்கையை ஏற்றம் பெறச் செய்கின்ருேம். கடிதம் நீண்டு விட்டது ஆதலின் நிறுத்திக் கொள்ளுகின்றேன். மற்றவை அடுத்து. வணக்கம்.

தங்கள் அருமை மகன்

எழிலன்.

"தேசிங்கு ராஜன்"

(ஆக்கியோன் திரு. (கண்ணு) நா. அரங்கன், சின்னசீரகப்பாடி)

ஷா ஆலம்:—நிறுத்து! யார் முன் நின்று பேசுகிருய் என்று ஞாபகம் இருக்கட்டும்!

தேசிங்கு:—நன்கு இருக்கிறது! டில்லி பாதுஷா ஷா ஆலத்தின் முன் என்று!

ஷா:—இல்லே! நெருப்பின் முன் நின்று .... கடைப் பிடிப்பாயடா! கசடனே!

மகமத்:—(கோபம் அடைந்தவனுய்) பாதுஷாவே பார்த்துப் பேசும்! நான் யாரென்பதை அறியாது, அதிகாரத் தோரணேயிலே, ஏளனத்தோடு பேசுகிருய்! நான் இருப்பதோ செஞ்சி! ஆம் தெற்கே வெகு தூரம்! அதனே ஆண்டவர் எமது மன்னர் தரணி சிங்! அவரும் இங்கு தான் இருக்கிருர்! அதுவும் உமது வசத்திலே! அவரது மெய்க்காப்பாளர் சையத்கானின் மகன் யான்! என் பெயர் மகமத்!

ஷா:—(சிறிது தணிந்து, அன்பாக) மகமத்தா! முகமதியனு! என் இனமா?

ம:—ஏன்! இனத்தைக் காட்டி இணங்க வைத்து விடலாம் என எண்ணுகிருயா! பாதுஷாவே! உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினேக்கக் கூடியவர்கள் அல்ல எமது முன்னேர்கள்! உண்மையை உணர்ந்தவர்கள்! கடமையை மறவாதவர்கள்! கண்ணியமே பெரிதென வாழ்ந்தவர்கள்! அப்படிப்பட்ட சந்ததியின் தோன்றல் தான் நான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்! மேலும் செஞ்சியின் செல்வன் தேசிங்கனின் முதல் நண்பன். எமது செஞ்சி மன்னர் தரணிசிங்கை விடுவித்துச் செல்லவே இங்கு வந்துள்ளோம்!

ஷா:—(கிண்டலாக) தேசிங்கனின் நண்பனு! மகமத் என்ன சொன்னுய்! தரணிசிங்கை விடுவித்துச் செல்ல! (சிரிப்பு) செஞ்சியின் மன்னனே விடுவித்துச் செல்ல! (சிரிப்பு) பின் எங்கே எந்தப் பொடிப்பயல் தேசிங்கன்! (என்று கூறி சிரிக்கிருன்.)

ம:—சிரிக்காதே! பாதுஷாவே சிரிக்காதே! உன் சல்லாப சாம்ராஜ்யத்திற்குச் சாவுமணி அடிக்க, அதி விரைவில் வந்து விடுவான் எனது நண்பன் தேசிங்கன்! உன் குதிரையை அடக்கி, உன் கொட்டத்தையும் ஒடுக்கி, குறுநில மன்னர்களுக்கு எல்லாம் விடுதலே அளிப்பான் எமது நண்பன் தேசிங்கன்!

ஷா:—சாவு மணி அடிப்பான் எனது சல்லாப சாம்ராஜயத்திற்கு! (சிரிப்பு) அடக்குவான் எனது நீலவேணிக் குதிரையை! (சிரிப்பு) ஒடுக்குவான் எனது கொட்டத்தை! (சிரிப்பு) விடுவிப்

பான் குறுநில மன்னர்களே! (சிரிப்பு) யார்? உனது நண்பன் தேசிங்கன்! (சிரிப்பு) (பின் கோபமாக) வரட்டும் பொடிப்பயல்! அவனையும் பிடித்து, உன்னுடன் சேர்த்து விலங்கிட்டு உங்கள் இருவரையும் அவன் அப்பனையும், ஆகமூவரையும் என் கண் குளிர சித்ரவதை செய்கிறேன்! பொடிப்பயல் தேசிங்கன்! பொடிப்பயல்! (சிரிப்பு) (இது சமயம் பெரும் சிரிப்புடன் தேசிங்கு, தன் இரண்டு கரங்களிலும், இரண்டு உடைவாட்களைப் பிடித்தவாரே)

தே:—பொடிப்பயல்! பொல்லாத நினைப்பு! பாதுஷாவே! பொல்லாத நினைப்பு!

ஷா:—யார்! தேசிங்கனு!

தே:—ஆம்! தேசிங்கன் தான்! நீ நீர் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நான் நெருப்பு! நீர் அனல்! நீர் கொடிய வேங்கை! நான் கூர்மையான வேல்!

ஷா:—கொக்கரிக்காதே! கொடியவனே!

தே:—(மிகுந்த கோபத்துடன்) கொக்கரிக்கவில்லை மன்னவா! நான் வந்த காரியத்தை உடனே நிறைவேற்று!

ஷா:— நீ வந்த காரியம்! உனது நண்பனை விடுவித்துச் செல்ல . . . .

தே:—ஆம்! அத்துடன் எனது அப்பாவையும் பிற குறுநில மன்னர்களை எல்லாம் விடுவிக்க!

ஷா:—அப்படியானல், நீ எனது பொல்லாத பரியை அடக்க வேண்டும்!

தே:—அடக்குகிறேன்! அவனி அறிய!

(இது சமயம் அமைச்சர் எழுந்து)

ராஜலிங்கபாபு:—வீண் ஆசை! முடியாது!

தே:—முடியாதா? பற்றி எரியும் மூங்கில் காட்டில் சிக்குண்ட அரவம் துடி துடிக்காமல் இருந்தால், வெம்பு பட்ட மான் வேதனைப் படாமல் இருந்தால், வெண்மதி என்றென்றும் முழு மதியாக இருந்தால், ஏன்? மனிதன் பகுத்தறிவைப் பெருமல் இருந்தால், நானும் உனது பரியை அடக்காது இருக்கலாம்! எங்கே உனது பரி! கொண்டு வரச்சொல்! இந்தத் தேசிங்கனின் இரும்புக் கரங்கள் உனது பரியின் பிடரியிலே பட்ட மாத்திரத்திலே பிணமாகக் காட்டுகிறேன்!

ஷா:—நன்று! நாளைக்காலை உனது முறையீட்டை நிறைவேற்றி வைக்கிறேன்! இப்பொழுதே உனது நண்பனை விடுதலை செய்கிறேன்! உங்கள் இருவருக்கும் நமது அரண்மனையிலேயே தங்க சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்!

தே:—எனது முறையீட்டை நிறைவேற்றி வைத்தமைக்கு நன்றி!

ஷா :—சபையின் நடவடிக்கைகள் முடிவுற்றன. சபை கலையலாம்.

காட்சி 12

இடம் :—போட்டி அரங்கு

காலம் :—காலை.

உறுப்பினர்கள் :—தேசிங்கு, மகமத், டில்லிபாதுஷா, ராஜலிங்கபாபு, மற்றும் அரண்மனை முக்கியஸ்தர்கள் பலர், காவலாளிகள், நீலவேணி, பீம்சிங். மக்கள் பலர்.

பக்கிரியால் பரிசாகக் கொடுக்கப்பட்ட பாதுஷாவின் நீலவேணிக் குதிரை, பிறந்தது முதல் இன்றுவரை தன்மீது யாரையும் ஏறவிடாது, தனது முரட்டு சுபாவத்தினால் தடுத்தது. தேசிங்கன் நீலவேணிக் குதிரையின் மீது ஏறப்போகும் பொழுது, தன் மீது ஆள் ஏற வருவதைக் கண்ட நீலவேணி, தேசிங்கனை ஏறவொட்டாது தடுக்க, தனது முழு பலத்தையும் உபயோகித்தது. ஆனால், தேசிங்கனின் முன், அதன் தகிடு தாளங்கள் பலிக்கவில்லை. நீலவேணியின் பிடரியைத் தாவிப் பிடித்த தேசிங்கன், பிடிமானத்தோடு, தன் முழு பலத்தையும் பிரயோகித்து, நீலவேணியைத் தன் இசைக்கு இணங்க வைத்தான்! தேசிங்கனின் இசைக்கு நீலவேணி இசைந்தது! ஐம்பத்துஆறு நாட்டு அரசர்களாலும் அடக்க முடியாத நீலவேணியின் அட்டகாசச் செயல்களை அடக்கினான் தேசிங்கன்! ஒடுக்கினான் அதன் கொட்டகத்தை! இசைய வைத்தான் தன் இசைக்கு!

(இது சமயம் வெற்றி முரசு கொட்டப் படுகிறது)

மகமத் :— தேசிங்குக்கு குழுவினர் :— ஜே!	(இங்ஙனம் மும்முறை பேரிரைச்சல் ஒலிக்கிறது!

(குதிரையை அடக்கிய தேசிங்கை, பாதுஷா தன் இரு கரங்களாலும் இறுகக் கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து கொள்கிறார். கொடிய காராக்கிரகத்திலே காவற்கைதிகளாக இருக்கும் குறுநில மன்னர்களை எல்லாம் விடுவிக்க உடனே உத்தரவு அனுப்பலானார். தேசிங்கனும் தன் தந்தையைக் காண பேரவாக் கொண்டு, சிறைச்சாலையை நோக்கிப் போனான். அதுசமயம் நீலவேணிக் குதிரையை அடக்கி வெற்றி வாகை சூடிய தேசிங்கை, டில்லிமா நகரமே புகழலாயிற்று.)

காட்சி 13

இடம் :— சிறைக் கூடம்.

காலம் :— பிற்பகல்.

உறுப்பினர்கள் :— தேசிங்கு, மகமத், தரணிசிங், காவலாளிகள் (மாறன், வீரன்)

(மாறனும், வீரனும் சிறைச்சாலையில் இருக்கும் தரணிசிங்கை விடுதலை செய்கின்றனர். விடுதலை அடைந்து வெளியே வந்த தரணிசிங், தேசிங்கை தன் மகன் எனத் தெரிந்து, கொள்கிறான்.

தே :—அப்பா! அப்பா!

த :—தேசிங்கு! தேசிங்கு! (என ஆவேசத்துடன் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக்கொள்கின்றனர்.)

தே :—அப்பா! நான் அன்னையின் வயிற்றிலே நிறை கர்ப்பமாய் இருக்கும்பொழுது, "எனக்கு ஒரு மகன் பிறப்பான்! பிறந்ததும் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைவேன்! இரவும் பகலும் இணை பிரியாது அவன் அருகில் இருந்து, அவன் பேசும் மழலை மொழி கேட்டு அகமிக மகிழ்வேன்" எனப் புகன்றீராமே! அப்படிப் பட்ட தங்களுக்கா இப்படிப்பட்ட நிலை ஏற்பட வேண்டும். ஐயகோ! அதை நினைத்தாலே நெஞ்சம் நெக்குறும் போல் இருக்கிறதே! அப்பா! தங்களின் சிறைச் செய்தியை நான் முன்னரே அறிந்திருந்தால், தாங்கள் இன்னேரம் செஞ்சியில் அல்லவோ இருப்பீர்கள்! பெரு மகனைப் பெற்றும் பெருந் துயரத்திற்கல்லவா தாங்கள் இதுகாறும் ஆள் ஆகிவிட்டீர்கள்!

த :—மகனே! தேசிங்கு! "விளக்கினில் அகப்பட்ட விட்டில்" போல் தான் என் நிலை இது காறும் இருந்தது. உன் பால் போன்ற முகத்தைக் கண்டவுடன், 'பகலவனைக் கண்ட பனி மறைவது போல், என் துயரமெல்லாம் மறைந்து விட்டது. தேசிங்கு! வைர ஒளி அழகாய் வளர்ந்திருக்கும் உன் வாலிபத்தை ஒரு முறை அணைத்து அனுபவிக்கும் பேறு கிடைத்தமையையும், யாராலேயும் அடக்க முடியாத நீலவேணிக் குதிரையை அடக்கி, இந்த நாட்டு மன்னனின் கொட்டத்தை அடக்கினமையையும் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், எனதுள்ளம் என்றுமில்லா உவகையை இன்று அடைகிறது! தேசிங்கு......

தே :—அப்பா! தாங்கள் இனி எதற்கும் கிஞ்சித்தேனும் கவலைப் படவேண்டாம். தியாகமே உருவான தங்களையும், அன்பே உருவான அன்னையையும், மாசுமறுவற்ற நம் நாட்டு மக்களையும், உயிருக்குயிர் ஆன எனது நண்பன் மகமத்தையும் காப்பது வளையாத உள்ளம் கொண்ட அந்தக் காளையின் கடமை அப்பா!

த :—(ஆச்சரியத்தோடு) மகமத்தா! யார் அப்பா அப்படிப் பட்ட நண்பன்!

தே :—கிடைத்தற்கரிய மாணிக்கம்! பிறப்பிற்குப் பிறப்பான சோதரன்! உடல் இரண்டு; ஆனால், உயிர் ஒன்று என்று கருதும் உத்தமன்! அவன் தானப்பா மகமத்! நமது மெய்க் காப்பாளரின் மகன்! தங்களை விடுவிக்க, எனக்கு உதவிகள் பல புரிந்தவன்.

த :—அப்படியா! பின் எங்கேயப்பா அப்படிப்பட்ட உத்தமன்.

(இது சமயம் மகமத் வருதல் மகம்மதைப் பார்த்த தேசிங்கு)

தே :—(தனது தந்தையிடம் வரும் மகமத்தைக் காட்டி) இவன் தானப்பா அந்த உத்தமன்!

த :—வா ! மகமத் வா !

ம :—அரசே ! (இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொள்கின்றனர், பின்)

த :—மதமத்! நீ எத்தகைய தன்மை படைத்தவன் என்பதை தேசிங்கின் வாயிலாக அறிந்து கொண்டேன். நீங்கள் இருவரும் இப்பொழுது எப்படி ஒருவர்க்கொருவர் இணைபிரியாது ஒற்றுமையாக இருக்கிறீர்களோ, அதுபோலவே உமது வாழ்நாள் வரையும் இருக்க வேண்டுமென்று, உங்கள் இருவரையும் கேட்டுக் கொண்டு, அத்தகையத் தன்மையை என்றும் அருள்பாவிக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ம :—மகராசா ! நாங்கள் இருவரும் நம் நாட்டை விட்டுப் புறப்பட்டு நாட்கள் பல கடந்துவிட்டன. நமது நாட்டிற்குச் செல்லலாமே !

தே :— ஆம். அப்பா ! அன்னையார் முதல், நம் நாட்டு மக்கள் அனைவரும் வழி மேல் வழி வைத்து, நம் வருகையை எதிர்நோக்கிய வண்ணம் இருப்பார்கள்.

(இது சமயம் ஓர் காவலாளி வந்தவாரே)

காவலாளி :—அரசே! தங்களை அழைத்து வருமாறு எமது மகாராசா உத்தரவு.

த :—வருவதாகத் தெரிவி. போ ! (என்று கூற காவலாளி சென்று விடுகிறான், பின் தேசிங்கையும், மகமத்தையும் பார்த்து) வாருங்கள். போகலாம். (எனக் கூற சென்று விடுகின்றனர்.)

[தொடரும்]

—o—

கருணை உள்ளம்

(திரு வெ. இராஜமாணிக்கம்)

அன்றொரு நாள் மாலை 4-மணிக்கு மேகக் கூட்டங்கள் ஒன்று சேர்ந்து வீர முழக்கம் கொட்டியது. ஒலி காதைத் துளைத்தது. 4-மணிக்கே உலகம் இருளால் தவித்தது. இடையிடையே மின்னல் ஒளி கண்ணைப் பறித்தது. வானத்திலிருந்து சொட்டுச் சொட்டாக மழை பெய்யவில்லை. ஒரு சல்லடை நிறைய தண்ணீர் விட்டால் எப்படி ஊற்றுகிறதோ அதுபோல் மழை கொட்டியது. பெருங் காற்றும் சேர்ந்து வீசத் தொடங்கியது. இந்த மழையிலும், காற்றிலும் பறவை இனங்கள் வேறு பயந்து பரிதவித்தது. தாய்ப் பறவைகள் தன் குஞ்சுகளை நோக்கிச் சத்தமிட்டுக் கொண்டே விரைந்து பறந்தது.

அடித்த காற்றினால் எத்தனையோ மரங்கள் காற்றை எதிர்த்து நிற்க சக்தியில்லாமல் கீழே விழுந்து கும்பிட்டது. இதனால் பாதையில் போக்குவரவே நின்று விட்டது. ஆறுகளிலும், ஓடைகளிலும்

நீர்ப் பெருக்கெடுத்து ஓடியது. அப்பப்பா மலையிலிருந்து வந்த அந்த ஆற்றில் மிதந்து வந்த மரங்களும், தன் சகாக்களுடன் செல்ல முடியாத கிழ ஆடுமாடுகளும் எண்ணற்றவை. இந்தப் பயங்கரமான நிலையில் தான் நானும் அகப்பட்டுப் பரிதவித்தேன்.

மழைக்காக மரத்தடியில் நிற்கலாமென்றாலோ எங்கே என் மீது மரம் ஒடிந்து விடுமோ என்ற பயம் வேறு. இதனால் பாதையின் மத்தியில் நடந்து சென்றேன். என் உடைகளெல்லாம் நனைந்து விட்டதால் அதன் பாரம் வேறு. உடல் குளிரால் நடுங்கியது. கீழ்ப்பல் வரிசைகள் மேல் பற்களுடன் சண்டை போட்டது. காதுகள் வேறு சண்டையை நிறுத்த விண்ணப்பம் கொடுத்தது. இந்த வழக்கைத் தீர்க்க கைகளுக்கும் உத்தரவிட்டன. அது என்னால் முடியாது என்று மறுத்து உடலைப் பொத்திக் கொண்டது. இவைகளுக்கெல்லாம் வழி தேட ஓரிடத்தில் தங்கினால் சரியாய்ப் போய்விடும் என்றால் அந்தப் பொட்டல் காட்டில் ஒரு குடிசையும் அருகில் இல்லை. ஒரு மைல் சென்றால்தான் ராஜபுரத்தை அடையலாம். சைக்கில் வேறு ஓட மறுக்கிறது. மண் அப்படியே பிடித்துக் கொள்கிறது. இதனால் நடந்தே பாதையின் மத்தியில் வண்டியைத் தள்ளிக் கொண்டு ஓடினேன்.

ராஜபுரத்தை அடைந்தும் மழை நிற்கவில்லை. முன்பின் தெரியாத ஒரு வீட்டின் தாழ்வாரத்தில் நின்றேன். வண்டியில் இருந்த பையை எடுத்து அதிலுள்ள துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு சட்டையையும் வேஷ்டியையும் பிழிந்தேன். வேஷ்டியால் தலையையும், உடலையும் துவட்டிக் கொண்டிருந்தேன். அப்பொழுது தான் அந்த வீட்டிலிருந்து ஒரு பெரிய அம்மாள் வெளித் தாழ்வாரத்திற்கு வந்தார்கள். சுமார் 40 வயதிருக்கும்.

யாரப்பா நீ. எந்த ஊர் போகனும்? என்றார்கள். நான் காஞ்சிபுரம். தற்போது உல்லிமாநகருக்குப் போகவேண்டும் என்றேன். சுமார் 1½ மைலுக்கு அப்பாலே மழை பெய்து விட்டதால் இடையில் எங்கும் தங்கஇடமில்லை. ஆதலால் மழை விடும்வரை இங்குத் தங்கலாமென்று வந்தேன் என்றேன். பிறகு என் பெயரைக் கேட்டார்கள். ராஜு என்றேன். என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. உள்ளே அழைத்து வேறு உடையைக் கொடுத்து உடுத்திக் கொள்ளும்படி சொன்னார்கள். அப்பொழுது நினைத்தேன். இவர் இயேசுவின் சிஷ்யையோ என்று. இயேசுவின் குணமும், பொறுமையும், நிறைந்தவர்களாகத் தோற்றத்திலே காணப்பட்டது. குளிர்ந்த முகம். அவர் கொடுத்த அந்த உடையும் எனக்காகத் தைத்தது போல் கச்சிதமாக இருந்தது. இதிலிருந்து என்னையொத்த ஒருவர் இப்பார் என்று தெரிகிறதல்லவா? அவரைக் காணவேண்டும் போல் எனக்கு இருந்தது. அந்தப் பெரியம்மாவுக்கு நன்றி செலுத்தினேன்.

என் உடல் பழைய நிலைக்கு வந்தது. அதன்பின் அவ்வீட்டை உட்கார்ந்த இடத்திலேயே 4 பக்கங்களையும் பார்வையிட்டேன்.

பழைய காலத்துக் கட்டிடம். ஆனால் நல்ல முறையில் கட்டப்பட்டிருந்தது. தற்சமயம் கட்டியதுபோல் தோற்றமளித்தது. இதில் வாசல் நேருக்கு ஒரு கடிகாரம். அதன் பக்கத்தில் இயேசு, புத்தர் இவர்களின் படம். அவற்றின் எதிர்ப்புறத்தில் பல தெய்வங்களின் படங்கள். மேல்புறம் ஒரு பெரியவரின் படம். இப்படம் அந்தப் பெரியம்மாவின் கணவராக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். அவர் படத்திற்குப் பக்கத்தில் ஒரு வாலிபரின் படம் இருந்தது. இளம் வயது. இவர் தான் நான் நினைத்தவராக இருக்க வேண்டும். அதாவது இவ்வீட்டில் ஒரு ஆண் மகன் இருப்பான் போல் தோன்றியது.

மற்றும் ஒவ்வொரு வாசல் நிலையிலும் கைவேலைப் பாடுகள் நிறைந்த துணிகள் (லேஸ்) தொங்கவிடப்பட்டிருந்தது. இதனால் இவ்வீட்டில் ஒரு பெண்ணும் இருப்பதாகத் தோன்றியது. பணக்காரராய் இருத்தல் வேண்டும் என்று நினைத்தேன். கண்ணாடி பீரோவில் பலவிதமான வெள்ளிச் சாமான்கள் அடுக்கி அழகாக வைக்கப்பட்டிருந்தது. இவைகளைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். கடிகாரம் 6 தடவை கணீர் என்று ஒலித்தது. சற்று வெளியே கவனித்தேன். மழையும் விட்டுவிட்டது. மழை விட்டு எவ்வளவோ நேரம் ஆகிவிட்டதால் உடையை மாற்றிக் கொண்டு போகலாம் என்று நினைத்து எழுந்தேன்.

அப்பொழுதுதான் மாடியிலிருந்து ஒரு இளம் மங்கை இறங்கி வந்தாள். பெண் தானா அவள்! தெய்வலோகத்திலிருந்து இறங்கி வருபவள் போல் தோன்றியது எனக்கு. மேனியோ பசுமை கலந்த சிவப்பு. சிறிது நீண்ட அழகிய முகம். வில்போன்ற புருவம். குறும்புப் பார்வையை உடைய அழகிய இருசுழல் விழிகள். கதுப்புக் கன்னங்கள். கோவைப் பழத்தை யொத்த அதரங்கள். முத்துப் போன்ற பற்கள். பருமன் இல்லாமல் சிறிது நீண்ட கழுத்து. காதிலிருந்த வைரத் தோட்டின் ஒளி கண்ணைப் பறித்தது. கரு நாகத்தை யொத்த சடை அவள் மார்பின் மேல் ஊசலாடியது. முழங்கை வரை பொடிக்கலர் ஆர்கண்டி வாயல் சோலிக்கை ரவிக்கை. பாக்குக்கலர் கடாவ் வாயில் சேலை. கையில் மார்புடன் அணைத்தவாறு பெண்ணின் பெருமை என்னும் புத்தகம். இதுவல்லாது நெற்றியில் நான்கைந்து கேசங்கள் சுருண்டு ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்தது. இதனால் அவள் அழகை மேலும் அதிகரித்துக் காட்டியது. இவையெல்லாம் ஒரே நொடியில் நான் கண்டவை. அதே சமயம் என்னையும் அவள் பார்த்தாள். ஒருநிமிடம் பிரமித்து விட்டேன். அந்த நிமிடத்தில் தான் இரு ஜோடிக் கண்களும் எதையோ பேசிக் கொண்டன. புன்னகை பூத்துவிட்டுத் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டாள். கீழே இறங்கி அன்ன நடையிட்டு துடியிடையை அசைத்துக் கொண்டே வீட்டின் உட்புறத்திற்குச் சென்றுவிட்டாள். சென்ற பின்னும் என் கண்முன் அவள் உருவம் மறையாமல் இருந்தது.

ஏனப்பா எழுந்து விட்டாய் என்று அந்தப் பெரியம்மாள் சொன்ன உடனே தான் நான் என் நிலைக்கு வந்தேன். நேரமாகி விட்டதுங்க, வீட்டுக்குப் போகலாமென்று நினைக்கிறேன் என்றேன். உடனே அப்பெரியம்மா கையிலிருந்த காப்பியை என்னிடம் கொடுத்து உட்கார்ந்து குடியப்பா, போகலாம் என்று கொடுத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார்கள். மீண்டும் சிந்திக்கத் தொடங்கினேன். ஏன் நமக்காக இவ்வளவு உபசாரம். மழைக்காகத் தங்க வந்த எனக்கு உடை கொடுத்து உணவு கொடுப்பது ஏன் ? இவர்கள் குணமே விசித்திரமாயுள்ளதே என்று இதையும் அவளையும் மாறி மாறி நினைத்துக்கொண்டேயிருந்தேன். உடனே அந்த அம்மாள் மீண்டும் வந்து ஏன் அப்பா இன்னும் காப்பி குடிக்கவில்லையா ? என்ன யோசிக்கிறாய் ? ஊர்மேல் உனக்கு ஞாபகமோ ? என்றார்கள். இல்லிங்க காப்பி சூடாய் இருந்தது. அது சற்று நேரம் ஆறட்டும் என்றுதான் என்றேன். ஏன் சூடு ஆற்றிக் கொடுக்கட்டுமா ? என்றார்கள். வேண்டாங்க ஆறிப் போய்விட்டது என்று குடித்தேன்.

பிறகு என் நன்றியைத் தெரிவித்து விட்டு உலர்ந்த என் உடையை எடுத்து மாற்றிக் கொள்ளலாமென்று சென்றேன். அந்த அம்மாள் மறுத்து, நேரம் ஆகிவிட்டதால் இருட்டில் போகக் கூடாதென்றும், மேலும் வழி எல்லாம் சேராய் இருக்கும் என்றும் கூறி நாளைக்காலை போகலாம் என்று என்னைப் போக விடாமல் தடுத்து விட்டார்கள். எனக்காக ஏன் இவ்வளவு கஷ்டப் படுகிறீர்கள் ? என் உற்றார், உறவினர்கள் கூட இவ்வளவு பாசம் காட்டியதில்லையே ? என்றால் உங்களுக்கு அதிக சிரமமாய்ப் போய்விட்டது என்றேன். அவர் கண்ணிலிருந்து நீர்த் துளி தரையில் விழுந்து சிதறியது. ஏனம்மா அழுகிறீர்கள் ? என்றேன்.

ஆனால் கண்ணிலிருந்து முன்னை விட நீர்தான் அதிகமாக வந்ததே ஒழிய பதிலில்லை. நான் மீண்டும் தொந்தரவு செய்யவில்லை. சிறிது மௌனத்திற்குப் பின் ராஜு உன்னைப் போல் எனக்கு ஒரு மகன் இருந்தான். அதோ தெரிகிறதே ஒரு போட்டோ அவன் தான் என் ஏகபுத்திரன். அவன் பெயர் குணசேகரன். ஏறத் தாழ உன் உயரம். சொல்லப் போனால் பார்ப்பதற்கு உன்னைப் போலவே யிருப்பான். பிறகு வேறு ஒரு போட்டோவைக் காட்டி அவர் தான் என் கணவர் என்று சொன்னார்கள். சேகரன் 6 வயது இருக்கும் போது என் கணவர் இறந்து விட்டார். அவர் எப்பொழும் என்னைச் சாரதா, சாரதா என்று கூப்பிட்டுக்கொண்டே யிருப்பார். அவர் என்மேல் உயிரையை வைத்திருந்தார். அவர் சென்று 15 வருடமாகிறது. இதுவரை நான் தான் இவர்களையும் இப் பெரிய பண்ணையையும் கவனித்துக் கொண்டே வருகிறேன். எங்கள் பங்காளிகளெல்லாம் எங்களைக் கவனிப்பது இல்லை. அதனால் வீடு உண்டு, காடு உண்டு என்று இருந்து விட்டேன். சேகரை S. S. L. C வரை படிக்கவைத்தேன். சாந்தா 4 பாரம்

வரை படித்தாள். (சற்றுமுன் மாடியிலிருந்து வந்தாளே ஒரு பெண் அவள் தான்) பிறகு அவள் பக்குவம் அடைந்துவிட்டதால் அவளை நிறுத்தி விட்டேன். கடந்த ஆண்டுதான் குணசேகரன் படிப்பை நிறுத்திக் கொண்டு பண்ணையைக் கவனித்தான். எனக்கு ஒரு பாரம் நீங்கியது என்று நினைத்தேன். ஆனல், நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது போல் காய்ச்சலில் படுத்தான். சில நாட்களுக்குப் பிறகு எங்களை விட்டு .... துக்கம் தொண்டையை அடைக்கவே பேச முடியாமல் அழுதார்கள். எனக்கும் பரிதாபகரமாகயிருந்தது. அதனுல் தான் அப்பா உன் மேல் இவ்வளவு பாசம். என் மகன் போல் இருந்ததால் உன் மேல் அன்புகாட்டினேன் என்று கண்ணைத் துடைத்துக் கொண்டே கூறினுர்கள்.

உடனே நான் சாந்தாவை மேலும் படிக்க வைப்பது தானே என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தேன். இப்படிப்பு போதுமப்பா வீட்டிலிருக்கும் பெண்களுக்கு. மேலும் அவள் பக்குவம் அடைந்து விட்டதால் வெளியே அனுப்பிப் படிக்க வைப்பதற்கு எனக்கு இஷ்டம் இல்லை. மேலும் இவ்வூரில் பள்ளியில்லை. பக்கத்திலுள்ள கண்ணபுரத்திற்குத் தான் போகவேண்டும். வேறு துணையில்லாக் காரணத்தால் நிறுத்திவிட்டேன். பெண் என்றுல், அதுவும் அழகிய பெண்களைக் கண்டுவிட்டால் போதும். இந்தக் கண்ணபுரத்தார்கள் விடாது பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். கயவர்கள். இவ்வளவு தொல்லை நமக்கு வேண்டாமென்று தான் நிறுத்திவிட்டு வீட்டிலிருந்து அவள் படிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். ஏராளமான புத்தகங்களை வரவழைத்துப்படித்துக் கொண்டு தான் வருகிருள். அதேசமயம் வீட்டுவேலையையும் கவனித்துக் கொள்ளுகிருள். மேலும் எனக்கு வயதுஅதிகம் ஆகிவிட்டபடியால் முன் போல் வேலை செய்ய முடியவில்லை என்று பெருமூச்சு விட்டு விட்டு என்னை மாடிக்கு அழைத்துச் சென்று அவள் நூல் நிலையத்தைக் காட்டினுர்கள். ஆஹா! எவ்வளவு புத்தகங்கள். மத சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும், பெரியார்களின் வரலாறுகளும், விஞ்ஞான புத்தகங்களும், கதை, கவிதை, கட்டுரை, சங்கீதம் முதலியவைகள் சம்பந்தமாகவும், நாட்டு வரலாறு நூல்களும் இருந்தன. இன்னும் நாவல், தின. வார, மாத, இதழ் இவைகளும் அங்கிருந்ன.

மற்றும் பொழுது போக்கிற்கான கருவிகளும், இசைக்கருவிகளும் ஒரு பக்கம் ஒழுங்காக இருந்தன. சாந்தா சகலகலாவல்லி போலும் என்று நினைத்துக் கொண்டேன். இது அல்லாது ஒரு பீரோவில் அவளால் பின்னப்பட்ட சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த துணிகளைப் பார்க்க ஆச்சரியமாய் இருந்தது. இவளை மனைவியாகப் பெறுபவன் பெரும் பாக்கியவான் தான் என்று நினைத்துப் பெருமூச்சு விட்டேன்

[தொடரும்]

யார் பெற்ற செல்வம்!

திரு. M. A. C. பச்சையப்பா, கும்பகோணம்.

(சிவலோகபுரம், கண்மணி விலாஸ்)

(ஓர் நாள் இரவு பர்வதா நன்ருக அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கப் பர்வதா ராஜாவுடன் நெருங்கிப் பேசுவது போல் கனவு காணுதல்)

பர்வதா :—அத்தான், இத்தனை நாளாய் என்னை மறந்து விட்டு மைவிழி மாதர்கள் மேல் நாட்டங் கொண்டது ஏன்? என் மீது கோபமா?

ராஜா :—(கிட்டநெருங்கி மார்போடு சாய்ந்தபடி) அன்பே! உன்னைக் கைவிட்டு விட்டேனென்ற வாட்டமா? உன்னைப் பிரிந்து விலகினே னென்பதற்காகக் கோபமா? ஆரணங்கே! அதோபார்! கண்ணுக்குக் குளுமை தரும் வெண்ணிலாவை!

பர் :—(திரும்பி) இதோ பாருங்கள். வண்ணமலர்ச் சோலையிலே வண்டினங்களின் ரீங்காரத்தை! அதோ பாருங்கள்! பனி நீர்த்துளிகள் அத்தாமரை மலர் மீது பளிச்சிட்டு மிளிர்வதை!

ராஜா :—விண்ணிலிலே தவழும் வெண்ணிலவு ஒளியினுல் உன் தங்க உடல் கொண்ட அங்க அமைப்பைக் கண்டு என்னுள்ளம் ஏங்கித் தவிப்பதைப் பார் கண்ணே!

பர் :—கதிரவனின் ஒளி பெற்ற உங்கள் திருமுகத்தைக் காண என் இன்பமெல்லாம் ஒன்று கூடிப் பேரின்பமாக இருப்பதை அந்த ஈசன் ஒருவனைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது அத்தான்.

ராஜா :—ஆஹா! பொருத்தமாகக் கூறுகிருயே?

பர் :—(சிரித்தபடி) திருத்திப் பிழையிருந்தால் கருத்துள்ளவர்கள் பொறுத்துக் கொள்வார்கள் அத்தான்.

ராஜா :—அது போல ..... என்னையே சீர்திருத்திக்கொள் என்கிருயே பர்வதா? ஆஹா! உண்மையை உணர்ந்து உவமானம் கூறுகிருயே?

பர் :—இப்போ நாட்டில் பகுத்தறிவு பெருகி வருகிறதினுல், பொருத்த மில்லாத வார்த்தைக்குக்கூட ....

ராஜா :—அர்த்தம், பிரித்து அனர்த்தத்தில் கொண்டு போய் விட்டு விடுகிருர்கள் இல்லையா பர்வதா?

பர் :—ஆம், உண்மை தான்!

ராஜா :—ஆருயிரே! அதோ பார். அந்தக் கற்சிலையைச் சிருஷ்டித்த சிற்பியின் கைத்திறனை?

பர் :—ஆம் ! நல்ல கைதேர்ந்த சிற்பியினுல் செதுக்கப்பட்ட புத்தர் சிலையல்லவா அது ! இப்பொழுது நம் நாட்டில் இந்தப் புத்தரைப் போற்றுதார் யார் ?

ராஜா :—அறிவாளியே ! அபார சக்தி உனக்கு . . . . ம் . . . . ஆமாம். இப்போ, இந்தப் புத்தரின் போதனைகளைப் பின்பற்றித் தான் நாடு சீர்திருந்தி வருகின்றதென்று சொல்லு ?

பர் :—பின்னே என்னவாம் !

ராஜா :—அதுதானில்லை ! இந்தப் புத்தரின் குற்றங் குறைகளை நீ கேள்விப்பட்டிருக்க மாட்டாய் !

பர் :—உலகமே போற்றும் அந்த உத்தமர் மேல் ஏனத்தான் அபாண்டமான பழியைப் போடுகிறீர்கள் ? மேலும், அவர் பெரிய மகானுச்சே ? அவராவது குற்றம் செய்ததாவது அத்தான் !

ராஜா:—பர்வதா, நானு அவர் மேல் பழியைப் போடுகிறேன். உண்மையை உணராமல் பேசுகிருய் நீ. தக்க ஆதாரம் இல்லாமலா சொல்வேன் ! இந்தப் புத்தர் கைப்பிடித்த மனைவியையும் பெற்றெடுத்த செல்வனையும் நட்ட நடுநிசியிலே கைவிட்டு விட்டுப் போனவர் தானே. ம் . . . . ஹூம் ! இவரைப் போற்றுகிறது இப் பொல்லாத உலகம் !

பர் :—அப்படியா ? கஷ்டமென்பது யாருக்குமே உள்ளது தானே. அதனுல் அவரைத் தூற்றி விடுவதா ?

ராஜா :—ஏதோ அவருடைய சில உண்மையான கருத்துக்களைக் கொண்டு பார்ப்போமானுல், போற்றத்தான் வேண்டும் பர்வதா !

பர் :—போகட்டும் . . . . நம் நாட்டின் கலையைப் பற்றி . . . .

ராஜா :—என்ன அபிப்பிராயம் சொல்லப் போகிறேனென்று தானே கேட்கிருய் ? இதோ நம் எதிரிலே இருக்கும் இந்தச் சிலை பல கலையும் கற்றுணர்ந்த சிற்பி ஒருவனுல் செதுக்கப் பட்டது தான். கலையைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போமானுல் . . . . கருணை என்கிற வற்றுத ஊற்றிலே மலரும் அழகிய மலரல்லவா இந்தக் கலை. இக்கலைக்காகப் பாடுபடும் அறிவு ஆற்றல் உள்ளவர்களைத் தூற்றவுந்தான் செய்கிருர்கள் துற்குறிகள் !

பர் :—ஆமத்தான் ! கண் மூடித்தனமான ஈடுபாட்டின் வெறிச் செயலால் கண்டபடியும் குறை கூறத்தான் செய்கிருர்கள் கசடர்கள் !

ராஜா :—கயவர்களுக்குக் கலையைப் பற்றிச் சொன்னுேமானுல் விலை விசாரிக்க ஆரம்பிக்கிருர்கள் பர்வதா ! போகட்டும் . . . . . எங்கே ! . . . . . ம் . . . . .

பர் :—ராஜா . . . . . ராஜா . . . . . .

(அது சமயம் குமார் வருதல்)

187259

(எழுந்தபடி) ஹா! தாங்களா?

குமார்:—ஆம், பர்வதா நான் தான் குமார்!

பர்:—என்னயிது? நான் காண்பது கனவா? இல்லை நினைவா? ஒன்றும் புரியவில்லையே எனக்கு,?

குமார்:—(சிரித்தபடி) பர்வதா, மனதில் அமைதி யென்பது இல்லையானல், நினைவு கனவாகத் தோன்றுவதில் வியப்பில்லையே!

பர்:—ஏன்? கனவும் நினைவாகி நிஜமாகவும், ஆவதுண் டல்லவா?

குமார்:—ஆகலாம்? ஆனல்....... இயற்கையாலேற்பட வேண்டுமே?

பர்:— ஆ! (என்றபடி ஓரமாக ஒதுங்குதல்)

குமார்:—அமுதே! எங்கே என்னைப்பார்! ம்.... இப்படித் திரும்பு! எப்போது பார்த்தாலும் சோகந்தானு? என்னிதய ராணி! என்னிடம் பேசக் கூசுவதேன்?

பர்:—என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நேரமாகி விட்டது. போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்.

குமார்:—ம்........கட்டளை பிறக்கும் வரை காத்திருக்க வேண்டியவன் தானே?

சீன். 25.

(அதே நாள், நளினு வீட்டில் ராஜா அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் பர்வதாவின் ஞாபகமாகப் பிதற்றுதல் அது சமயம் நளினு வருதல்)

ராஜா:—பர்....வ...தா.....என்...அரு...மை, பர்வதா, எங்கே....வா...என்னருகில், கண்ணே! என்னரு கில் வா!

நளினு:—ஹலோ, மிஸ்டர் ராஜா! தூக்கத்திலே கூட ஏக் கம் அதிகமிருக்கே? கனவு காண்கிறீர்களா? ராஜா! ராஜா!

(தட்டி எழுப்புதல்)

ராஜா:—(திடுக்கிட்டெழுந்து) யார்...பர்வ.....ஓ... நளினுவா?

நளினு:—ஆம், ராஜா, நளினு தான்! பர்வதா இனிமேல் இங்கெல்லாம் வரமுடியுமா? ம் ஹூம்....பக்ஷி பறந்து போய் விட்டதே என்று பகற் கனவு காண்கிறீர்கள் இல்லையா ராஜா?

ராஜா:—ஹா? விடிந்து விட்டதா? கனவு மட்டுமில்லை நளினு, நினைவும் சேர்ந்து நிலை தடுமாறி விட்டது.

நளினு:—இருக்கும்...அன்றொரு நாள் பர்வதாவைப் பற்றி தூஷித்தீர்கள், இப்ப...பூஜிக்கிறீர்கள்!

ராஜா :—தூஷித்தேனு? நானு?

நளினு :—பேஷ்! நன்ருயிருக்கிறது ராஜா. யார் பெற்ற செல்வம்? எவர் பெற்ற செல்வமோ? ஊர் பேர் தெரியாத ஒரு பெண்ணை எடுத்து வளர்த்து என் தலையில் கட்டப் பார்க்கிருர் என் மாமா. நானுவது அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாவது என்று அன்று கூசாமல் கூறிவிட்டு இன்று நெஞ்சிரக்கங் கொண்டு சஞ்சலப் படுவதைப் பார்த்தால் ......?

ராஜா :—கஞ்சிக்கு வழியில்லாதவளுடன் கொஞ்சிப் பேசிக் குலாவினுல், இஞ்சிப் பச்சடி எங்கேயிருக்கு என்று கேட்பாளாம் பேதை. அதுபோல, மிஞ்சிப் பேசவும் ஆரம்பித்து விட்டாய்! நீலி! இதோ பார் நளினி! இனிமேல் என் பர்வதாவைப் பற்றி குறை கூறிப் பேசினுல் மானம் மரியாதை இழந்தவளாகி விடுவாய். ஜாக்கிரதை!

நளினு :—வார்த்தையை வளர்த்தாதீர். நீர் இனிமேல் அந்தப் பர்வதாவைப் பற்றிப் பேச உரிமையில்லை யென்பதை உணரும்.

ராஜா :—போதும் நிறுத்தடி. அவள் என் மாமன் மகள்; எனக்கு உரிமையுள்ளவள். நீ யாரடி அவளைப் பற்றிப் பேச வேண்டாமென்று தடை செய்ய.

நளினு :—மிஸ்டர் ராஜா. பர்வதா உன் மாமன் மகளாயிருக்கலாம். இல்லை ஓர் அனுதைப் பெண்ணுயு மிருக்கலாம். ஆனுல், அவள் இனிமேல் ஓர் பணக்கார வாலிபனின் மனைவி என்பதை மறந்து விடாதீர். இனிமேலும், அவள் வாழ்க்கையில் குறுக்கிடுவது தகாது ராஜா, தகாது!

ராஜா :—ச்சே! நன்றி கெட்ட நான்சென்ஸ்!

ந :—ஆம்! உள்ளத்தைத் தெள்ளெனக் கூறுபவர்களுக்கு இந் நாட்டினர் தரும் பரிசு நான்சென்ஸ்; அப்படித்தானே?

ரா.—கள்ளி! சொல்லிக்காட்ட நீ யாரடி? சாகசக்காரி! கையில் காசுள்ளவரை மனிதனை மயக்கித் தெய்வமாக்கி, கற்சிலை போல் உட்காரவைக்கும் கைக்காரிகளின் பரம்பரையில் உதித்தவள் நீயென்று உணராமல் போனேனடி. துரோகி, காசு கைக்குக் கிட்டும் வரை காதல் விளையாட்டு. இல்லையானுல், அவனை விரட்டியடிக்குமளவுக்கு விபரீதம். கண்ணிழந்த கபோதியே கேள். இத் தங்கத் திருவிடத்தில் நீயும் ஒரு தமிழச்சி தானு? ஒண்டவந்த ஒருவனை ஓட்டாண்டி யாக்கி ஓட்ட வடிகட்டின பிறகு, ஓடவிட்டுப் பார்க்கும் ஊதாரி கூட்டத்தினள் நீயென்பதை இப்பொழுது தான்டி உணர்ந்தேன். போடி போ. என்னெதிரில் நில்லாதே.

ந :—(கோபமுடன்) மிஸ்டர் ராஜா. மரியாதை மண்ணைக் கவ்வும் அளவுக்கு வந்துவிட்டதே? நான் சொல்லுவதைக் கேளும்! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைத்ததுமல்லாமல் காதலித்த பெண்ணைக் கை விட்டு விட்டு, கபோதிதனமாய்க் கயவர்களைவிட நீர் காலித்தனத்தையும் கையாளுகிறீர் என்பதை இப்போது

காட்டி விட்டீர். இதோ இந்த நளினி உள்ளத்திலே மட்டுமல்ல உடலிலும் குறை பட்டவள் தான். காசுக்காகக் கண்டவர்களிடம் பல்லைக்காட்டும் பரத்தை மகளானாலும் மானமுடன் வாழவே வழிகோலினேன். ராஜா, இந்தச் சாகசக்காரியுடன் ஏன் சரசமாடினீர்? இந்த ஊதாரியுடன் ஏன் உறவாடினீர்? இவ்வளவும் தெரிந்திருந்தும் ஏன் பழகினீர் என்னிடம்?

ரா:—(சிரித்தபடி) ஏன் பழகினேனா? கேளடி கேடுகெட்டவளே! குப்பைக்கூலத்திலே மாணிக்கம், சேற்றிலே செந்தாமரை, நத்தை வயிற்றிலே முத்து என்றெல்லாம் பிதற்றுகிறார்களே பித்தர்கள்; அந்தப் பித்தர்களின் கும்பலிலே நானும் ஒருவனாக இருந்துவிட்டேனடி இது நாள் வரை. அழகிலே சிறந்த நீ அறிவிலும் நிறைந்த ஆற்றலுள்ளவளென்று எண்ணி, ஏமாந்தல்லவா போனேன். நான் பழகிய சில நாட்களிலேயே நீ மாசற்ற மாணிக்கமல்லவென்று கண்டுகொண்டேன். அப்போதும் உன்னை நான் வெறுத்துத் தள்ளவில்லையே. தாமிரத்தைத் தங்க மயமாக்க முயன்ற ரஸவாதியாகி விட்டேன். குணமென்பது உன்னிடம் குண்டுமணியளவு கூட இல்லை, உள்ளம் என்ற பொருளில்லாத உன்னைப்போன்ற அரக்கிகள் இந்நாட்டை விட்டு ஒழியும் வரை உண்மைக் காதல் உயர்வு பெறாது, ஆம் உயர்வு பெறாதுதான். உன்னுடன் இது காலும் பழகியதால் மழுங்கிப் போயிருந்த என்னறிவை இனியேனும் தீட்டிக்கொள்கிறேன். இனியாவது உன் குற்றங்குறைகளை உணர்ந்து யார் மீதும் சீற்றங் கொள்ளாமல் நேர்மையாக வாழக் கற்றுக்கொள்!

ந:—அய்யா புலிப்பட்டி ஜமீன் புத்திரரே. சிங்கப்பட்டிச் செல்வந்தர் சிகாரமே. உங்கள் பிரசங்கம் முடிந்ததா? ம்...... இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புத்திக் கூர்மையை, அப்பொழுதே தீட்டிவைத்திருந்தால் எவ்வளவு நன்மையாக இருந்திருக்கும்? உங்களைச் சொல்லி என்ன பயன்? உம்மைப் போலுள்ள ஆண்களினம் அத்தனைபேருக்கும் கண் கெட்டபிறகுதானே சூரியநமஸ்காரம். போதும்... போய்வாருங்கள். [தொடரும்]

கும்பகோணத்தில் காங்கிரஸ் மண்டல கமிட்டியில் புதியதாக நியமித்த மெம்பர்களின் பெயர்கள்.

துக்காம்பாளையத் தெரு

K. அருணகிரி பக்தர்
P. மாரிமுத்து (பீடா கடை)
S. மாரிமுத்து பக்தர்
K. V. முத்து
S. R. பெருமாள்

மீன் இலாக்காவினுல் நாம் அடைந்த பயன் என்ன ?

இத் தலைப்பு ஒருசிலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ஆனல், உண்மையை அலசிப் பார்க்குமிடத்து ஒன்றுமில்லை என்று சொல்வதைத் தவிர வேறென்றுமில்லை.

முதல் ஐந்து ஆண்டுத் திட்டகாலத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலும் மீனவ மக்களின் அபிவிருத்திக்காகவும் மீன் பெருக்கத்திற்காகவும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அப்படி ஒதுக்கியிருந்தும் கூட உள்நாட்டு மீனவர்களுக்கு ஒரு செல்லாக் காசுக்குக் கூடப் பயனில்லை. வெளி நாடுகளிலிருந்து கோடிக் கணக்கான பண உதவியும் ஆள் உதவியும் கிடைக்கின்றன. அவைகளினுலும் உள்நாட்டு மீனவ மக்களுக்கு எந்தவிதமான உதவியுங் கிடையாது.

மீன் இலாகாவானது மீனவர்களின் நலனுக்காகவும் மீன் அபிவிருத்திக்காகவும் பணியாற்றுகிறது என்று சொல்லப்படுகின்றது. மீன் இலாகாவின் வரும்படி யாவும் உள்நாட்டு நீர் நிலைகளிலிருந்து கிடைக்கின்றது. ஆனல், செலவு செய்வது உள்நாட்டு மீனவர்களின் நலனுக்காக அல்ல. ஒருசில இடங்களில் வேண்டாததும் அதிகமாக விருத்தியடையாததுமான மீன் குஞ்சுகளை நீர் நிலைகளில் விடுகின்றுர்கள். ஏன் ? டிபார்ட்மெண்டில் ஒரு சிலர் உத்தியோகம் செய்வதற்கும், பேட்டா வாங்குவதற்கும், செலவை மீனவர்களின் சொசைட்டியின் மீது சுமத்துவதற்குமே தவிர வேறென்றுக்காகவும் இல்லை யென்று துணிந்து சொல்லலாம்.

மீனவர்களுக்கு வீடு கட்டுவதற்கு நீண்ட காலக் கடனுகப் பணம் கொடுப்பதாகச் சொல்லி எல்லா சொசைட்டிகளிலும் விண்ணப்பம் முதலியன வாங்கப் பட்டும் இதுவரையில் இந்தப் பகுதிகளில் உள்நாட்டு மீனவர்களுக்கு ஒருவருக்கேனும் ஒரு ஊரிலேனும் பணம் கொடுத்ததாகத் தெரியவில்லை. கேட்டால் பணமில்லை என்கிறுர்கள்.

மீனவர்களுக்கு மார்க்கெட் வசதி செய்வதாகவும் மீனவர் சொசைட்டிகளுக்கே மார்க்கட்டுகளைக்

கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவு கூறுகிறது. ஆனால் நடந்தது என்ன? எந்த மார்க்கட்டும் மீனவர் களுக்கு முனிசிபாலிட்டியார் குத்தகைக்குச் சாதாரண மாய்க் கொடுப்பதில்லை. பல நிர்ப்பந்தங்களின் மேல் அதிகமான தொகைக்கே ஒன்றிரண்டு இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் அதுவும் இல்லை; அதைப் பற்றிக் கேட்பதும் இல்லை. மார்க்கெட் வாங்குவதற்கோ, கட்டுவதற்கோ, பழுது பார்ப்பதற் கோ, பணம் கொடுக்கப்பட வேண்டும் என்று உத்த ரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதன்படி எந்த மார்க் கெட்டுக்கும் எந்த விதமான உதவியும் இதுவரை ஒன் றும்செய்யவில்லை.

மீன் இலாக்காவினர் மீனவர் கூட்டுறவு சம்மேள னம் ஆரம்பிப்பதற்கு ஒவ்வொரு சொசைட்டியும் ரூ. 102பணம் செலுத்த வேண்டுமென்று சொல்லி ஆரம்பக் கூட்டம் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. இதுவரையில் அதைப் பற்றி யாரும் எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை. எவ்வளவு விண் ணப்பங்கள் அனுப்பினாலும் பதில் கிடையாது. இதை ஆரம்பித்து என்ன நன்மை அடையப் போகின்றீர்கள் என்று கேட்கின்றார்கள்? அதன் இரகசியம் ஒன்றும் புரியவில்லை.

மீன் இலாக்காவுக்காகக் குறிப்பிட்ட ஒரு அமைச் சர் இருந்து அவர் உத்தரவுக்கு ஒன்றும் மதிப்பிருப் பதாகத் தெரியவில்லை. அவர் சொல்வது ஒன்று. உத்த ரவு கூறுவது மற்றொன்று.

கனம் முதல் அமைச்சர் அவர்களும் மற்ற அமைச் சர்களும் கூட்டங்களில்கூட்டுறவு இயக்கங்களைப் பற் றிப் பொது மக்களுக்கு உபதேசிக்கிறார்கள். ஆனால், உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சொசைட்டிகளுக்குக் குத்தகை தருவதற்கு மறுக்கின்றார்கள். ஒரு சிலரை ஆதரிக்கும் அதே கை ஒரு சிலரை அடிக்கவும் அடிக் கிறது.

மீனவர் சொசைட்டிகளை வற்புறுத்தி ஆரம்பிக்கச் செய்தவர்களே இன்று குத்தகை தர மறுக்கின்றார் கள். சென்ற ஆண்டைப் போல இவ்வாண்டும் ஏலம் போடும்படி அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்துள் ளார்கள். மீனவர்கள் சொசைட்டிகளுக்கே குத்தகை தர வேண்டும் என்பதன் காரணங்களைப் பல முறை

பருவதவர்த்தினியில் வெளி வந்திருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்களென்று நம்புகின்றேன். அவைகளை இங்குச் சொல்ல விரும்பவில்லை.

குத்தகை வேண்டுமென பல சொசைட்டி மெம்பர்கள் ஒன்றுகூடி 26—12—57, முதல் அமைச்சரையும், மீன் இலாக்கா அமைச்சரையும் நேரில் கண்டு தங்கள் குறைகளைத் தெரிவித்தும் பயனில்லை.

இனிமேல் ஒரு கண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் தடவும் மீன் இலாக்காவாலோ, அரசாங்கத்தாலோ, மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தினாலோ, மீனவர் கூட்டுறவு சங்கத்தினாலோ எந்தவித பயனும் இருக்கப் போவதாகத் தெரியவில்லை. ஆகையால் கூட்டுறவு சங்கங்களைக் கலைத்து விடுவதைப் பற்றியோ சம்மேளனத்திற்காகக் கட்டியிருக்கும் பணத்தை வாங்கிக் கொள்வதைப்பற்றியோ யாதொரு ஆக்ஷேபணையும் இராதென்று நம்புகின்றோம். ' பழைய கறுப்பனே கறுப்பன் ' என்றபடி பழையபடி ஊரவர்களுக்கு அடிமை வேலை செய்து கொண்டு அவர்கள் 500 ரூபாய் ஏரியை 50 ரூபாயுக்கு எடுத்துக் கொண்டு உங்களுக்கு 1000 ரூபாய்க்குக் கொடுத்தாலும் அல்லது மிகக் குறைந்த கூலிக்குப் பிடித்துக் கொடுக்கச் சொன்னாலும் நீங்கள் தயாராயிருக்க வேண்டும் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். சொசைட்டியைக் கலைப்பதோ அல்லது அப் பணத்தைத் திரும்பப் பெறவோ நினைப்பவர்கள் டிப்டி ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அநுமதியின் மேல் செய்து கொள்ளலாம். மேலும் ஏரிகள் ஏலத்திற்கு வரும்போது சொசைட்டியின் பேரில் ஏலம் கேட்கவே வேண்டாம். தனிப்பட்டவர்கள் கேட்பதைப் பற்றி ஆக்ஷேபணையில்லை. ஊரார்கள் போட்டியிருந்தால் நீங்கள் ஏலம் கேட்கவே வேண்டாம் என்று கூற விரும்புகிறேன். ஏனெனில், அதிகமாக ஏலம் போனாலும் குறைவாக ஏலம் போனாலும், நீங்கள் எடுத்தாலும், இன்னும் மற்றவர்கள் எடுத்தாலும் கூலிக்கோ கிரயத்துக்கோ அனுபவிக்கப் போகிறவர்கள் நீங்கள் தாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சமூக மக்கள் யாவரும் ஒற்றுமையாயிருந்து சமூக முன்னேற்றத்திற்கு உழைத்து இனி வரும் சந்ததியர்களையாவது மீன் பிடிக்கும் தொழிலுக்கு விடாமல், நன்றாகப் படிக்கவைத்து அரசியலில் புகுத்தி உத்தி

யோகத்திலமர்த்தி முன்னணியில் நிற்கச் செய்யுங்கள். கூலிவேலை செய்து பிழைத்தாலும் பிழைக்கலாம், பிச்சை எடுத்தாலும் எடுக்கலாம், மறந்தேனும் மீன் பிடிக்க அனுப்ப வேண்டாம். இந்த ஓர் உதவியை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சந்ததியார்களுக்குச் செய்துவிட்டீர்களானால் அதுவே உங்களுக்குப் பெரும் புண்ணியம்.

அடுத்த இதழில் மாகாண சங்கமும், அட்வைசரி போர்டும் என்னென்ன பிரயத்தனம் செய்தார்கள் என்பதைப் பற்றி விவரம் எழுதுகிறேன். அட்வைசரி போர்டு கூட்டமும் சொசைட்டிகளுக்குக் குத்தகைவிட வேண்டுமென கேட்கப் போகின்றார்கள் என்பதன் நோக்கத்தால் தான் இன்னும் நடைபெறவில்லை போலும். ஆதலால் அந்த ஸ்தானத்தையும் ராஜிநாமா செய்து விடுவது நல்லது என்பதைச் சொல்லாமல் இருப்பதற்கில்லை. என்னமோ! நாம் வந்த வினையை நாம் அனுபவித்தே தீரவேண்டும். பிறரை நோவதில் பயனில்லை. "தன் கையே தனக்கு உதவி" என்பதை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டோமானால் மற்றவர்களின் தயவோ தாக்ஷண்யமோ நமக்கு வேண்டாம். எல்லாம் வல்ல அங்காளபரமேஸ்வரி நமக்கு அருள் பாலிப்பாராக.

---o---

இடைப்பாடி மண்டலக் காங்கிரஸ் கமிட்டி.

ஷை கமிட்டியின் தேர்தல் 28—11—57 ல் இடைப்பாடி முசாபரி பங்களாவில் நடைபெற்றபோது அடியிற் கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவர் :— திரு R. கோவிந்த கவுண்டர்
உபதலைவர் :— திரு S. K. G. நாராயண பக்தர்
பொருளாளர்:— திரு P. A. பூத்தாண்டி பக்தர்
காரியதரிசி :— திரு E. பொன்னுசாமி பக்தர்.

நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள் :—

திருவாளர்கள் :

அ. கை. மாரிமுத்து பக்தர்; R. ஆறுமுக பத்தர்; P. A. அருணாசலம்; [illegible] சாமி பக்தர்; R. S. நாராயணன்; V. ஆறுமுக கவுண்[illegible] A. ராம கவுண்டர்; R நாரா[illegible]ன்; M. கிருஷ்ண[illegible] M. வெங்கட சுப்பிரமணிய[illegible]

187259



BUY ALWAYS

OUR BEST QUALITY

FINE & DELICIOUS TO DRINK

COFFEE

RAW, ROAST & GROUND

OUR SCENTED NUTS—A SPECIALITY

Sawmy's Coffee Mfg., Co.,

262, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1.

PHONE No. 3687.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

777 மார்க்

அசல் ஆப்பீல், திராக்ஷ, மாதுளம், மாம்பழம்,
பழரசங்களினுல் மெஷினில் தயார் செய்த
புருட் ஸ்குவாஷ் (FRUIT SQUASHS)ம்,
ரெடிமிக்சர் ரவா தோசை பவுடரும்,
அப்பளம், வடாம், எல்லாவகை வற்றல்களும்
எங்களிடத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் & கோ.

ஸ்ரீ ராமபவான் பில்டிங்ஸ்

46, தம்புசெட்டி தெரு :: மதராஸ்-1.

Editor, Printer, Publisher: Sri V. M. Natesam, Goodland & Co.,
55, Muthumari Chetty Street, Madras-1,